விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 மாசி 1 ஜ, ஆகி 3 இதழ் 3
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 13-2-1986

UNIVERSITY OF JAFFNA SRI LANKA RECEIVED 13-2-1986 PERIODICALS DIVISION LIBRARY

## மலையக வன்செயல்கள்: விசாரணை கமிஷன் நியமிக்கப்படும்?

(கொழும்பு)

மலையகத்தில் அண்மையில் நிகழ்ந்த வன்செயல்கள் பற்றி ஆராய அரசாங்கம் ஒரு பாரபட்சமற்ற கமிஷனை நியமிக்கும் சாத்தியம் இருப்பதாக சிரேஷ்ட அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மலையக வன்செயல் சம்பவங்கள் தொடர்பாக பந்தோபஸ்துக்குப் பொறுப்பான அமைச்சர்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கைகளை நேற்று அரசாங்கம் பரிசீலனை செய்ய ஆரம்பித்தது.

இதேவேளையில் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வகுப்புவாத வன்செயல்களுடன் தமக்கு எதுவித சம்பந்தமும் இல்லை என்று ஈரோஸ் சென்னையில அறிவித்துள்ளது. மலையக வன்செயல்களில் 'ஈரோஸ்' இயக்கத்திற்கும் பங்கு உண்டு என்று பிரதமர் ஆர். பிரேமதாசாவும், மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்காவும் ஏற்கனவே குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கடலில் நள்ளிரவில் நடந்த பயங்கரம்

# மீனவர்படகுமீதுபீரங்கித்தாக்கு!

# ஆறுபேர்பலி! ஒருவர்தப்பினர்!!

## குருநகர் சோகமயம்

(யாழ்ப்பாணம்)

**கடலில் மீன்பிடிக்கச் சென்ற குருநகர் மீனவர்கள் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்கானதில். ஆறு மீனவர்கள் பலியானார்கள்!**

**இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு பாலைதீவுக்கும் இரணைதீவுக்குமிடையில் (சோளகம்) நிகழ்ந்துள்ளது.**

இது பற்றிக் கூறப்படுவதாவது:

நேற்றுமுன்தினமிரவு, வழக்கம் போல குருநகர் மீனவர்கள், தத்தமது படகுகளில் கடலில் மீன்பிடிக்கச் சென்றனர்.

இவர்களில், ஒரு படகில் சென்ற ஏழு பேருக்கே மேற்படி பயங்கரம் நிகழ்ந்துள்ளது!

ஏழுபேரும் சென்ற படகு, பாலைதீவுக்கும் இரணைதீவுக்குமிடையே நகர்ந்து கொண்டிருக்கையில் திடீரென இப்படகை நோக்கி பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன என்றும், படகு சின்னா பின்ன

(5ம் பக்கம் பார்க்க)

## இரு சம்பவங்கள்: ஐவர் பலி

[சென்னை]

வாழைச்சேனை பேய்த்தாளை என்னுமிடத்தில் நேற்றுமுன்தினம் ரோந்துசென்ற இரு ஜீப்வண்டிகள்மீது தாம்மேற்கொண்ட சிலிண்டர் குண்டுத் தாக்குதலால் ஒரு ஜீப்வண்டி சேதமடைந்ததுடன் 3 அதிரடிப் பொலிசார் பலியானதாக

(5-ம் பக்கம் பார்க்க)

## ரொமேஷ் வருவார் லலித் போகமாட்டார்

(கொழும்பு)

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி இம்மாதஇறுதியில் அல்லது அடுத்தமாத முற்பகுதியில் மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்வார் என்று ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்ததிஸ்ஸ டீ அல்விஸ் நேற்றுப் பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு. ரொமேஷ் பண்டாரியின் உத்தேச இலங்கை விஜயம் தொடர்பாக தேசிய பாதுகாப்பமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி இந்தியா செல்வாரா என்று நிருபர் ஒருவர் கேள்வி எழுப்பியபோது ''அமைச்சர் அத்துலத்முதலி இந்தியாவுக்குப் போகமாட்டார்'' என்று கலாநிதி அல்விஸ் பதிலளித்தார்.

## கொலையுண்ட நிலையில் எதிர் எதிர் மரங்களில் ஆணும்பெண்ணும்

[வவனியா]

வவனியா - யாழ்ப்பாணம் வீதியில் கனகராயன்குளம் என்ற இடத்தில் ஒரு ஆணும் பெண்ணும் சுட்டுக்கொல்லப்பட்டநிலையில் எதிர் எதிரே இருமரங்களில் கட்டிவைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் கணவன்-மனைவியாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இம்மரணங்கள் பற்றிய மேல்விபரம் உடனடியாகத் தெரியவில்லை.

## 'இன்ரசிற்றி' மீது குண்டுவீச்சு! சேதம் இல்லை; கொழும்பு திரும்பியது

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து நேற்று யாழ்ப்பாணம் நோக்கி வந்த 'இன்ரசிற்றி' ரயில்மீது கைக்குண்டு வீசப்பட்டதால் ரயில் சாரதிக்குசிறு உரசல்காயமேற்பட்டது ரயில்என்ஜின் கதவும் சிறு சேதமடைந்தது.

ஆனையிறவுக்கும் பளைக்குமிடையில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இக்குண்டு வீச்சுச் சம்பவம் இடம்பெற்றது.

ரயில் சாரதியான தர்மலிங்கம் என்பவருக்கே சிறுகாயம் ஏற்பட்டதைத்தொடர்ந்து நேற்று கொழும்பு நோக்கி ரயில் புறப்பட்டபோது மற்றொரு சாரதியே கடமையாற்றினார்.

'இன்ரசிற்றி' ரயில் ஆனையிறவைத் தாண்டி வந்து கொண்டிருந்த பொழுது ஒரு கோஷ்டியினர் மரக்குற்றிகளைப்போட்டு தடுத்து நிறுத்தியதாகவும பின்னர்தடையை

(5-ம் பக்கம் பார்க்க)

## கடற்படை முகாம் சென்ற 77 மூடை சம்பா அரிசி கடத்தப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாமிற்கு லொறியொன்றில் எடுத்துச் செல்லப்பட்ட எழுபத்தேழு மூடை சம்பா அரிசி, ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத இளைஞர்களினால் மூளாய் அருகில் வைத்து கடத்திச்செல்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஆயுதப் படையினரின் அச்சுறுத்தல்: 69 திருமலை அகதிகள் யாழ். வந்தனர்

(கா. யோகநாதன்)

திருகோணமலையிலுள்ள அகதிகள் முகாம்களுக்கு ஆயுதப்படையினர் சென்று அகதிகளைக் கூட்டிச் செல்வதைத் தொடர்ந்து அச்சமடைந்த 16 குடும்பங்களை சேர்ந்த 69 அகதிகள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவர்கள் நல்லூர் சங்கிலியன் புனர்வாழ்வு கழக அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர்.

பங்குளத்தைச்சேர்ந்த இந்த 16 குடும்பங்களும் கடந்த 6

[5 ம் பக்கம் பார்க்க]

## ஆயுத படைகளுக்கு ஊக்குவிப்புப் படி!

(கொழும்பு)

ஆயுதப்படையினருக்கு ஊக்குவிப்புப்படி வழங்க இலங்கை அரசு முன்வந்துள்ளது.

பாதுகாப்புக்கு பொறுப்பான அமைச்சர் எனும் வகையில் ஜனாதிபதி இதுதொடர்பாகச் சமர்ப்பித்த இந்த பிரேரணையை அமைச்சரவைநேற்று அங்கீகரித்தது

கடந்த ஜனவரி 1ம் திகதியிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்கு மட்டுமே இந்தப்படி வழங்கப்படும். தொழில் நுட்பத் தேர்ச்சிபெற்ற ஊழியர்களே இந்தப்படியை முக்கியமாகப்பெற உள்ளனர். 5-12 ஆண்டுகால சேவையிலுள்ள சகல படை ஊழியர்கள் 250ரூபாவும், 12-22 ஆண்டு கால சேவையில் உள்ளவர்கள் 500ரூபாவையும், 22 வருடத்துக்குமேற்பட்ட சேவையாளர் 750ரூபாவையும் மாதாந்தப்படியாகப் பெறுவர். (ச)

## பி. பி ஸி.க்கு இப்படியொரு சோதனை!

(லண்டன்)

பூட்டோவின் வாழ்க்கையை சித்திரிக்கும் நாடகங்களை ஒளிபரப்புவதில் பி. பி. ஸி.க்கு தடையேற்பட்டுள்ளது.

பிரபல எழுத்தாளரான தாரிக் அலி எழுதிய இந்த நாடகங்கள், பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சரின் தலையீட்டினால் தடைப்பட்டுள்ளது.

பூட்டோபற்றிய நாடகங்களை ஒளிபரப்பினால் பிரிட்டன்-பாகிஸ்தான் உறவுகள் பாதிக்கப்படலாமென பிரிட்டிஷ் அரசு கருதுவதால் இந்நெருக்கடி ஏற்பட்டுள்ளது. (ரு)

## பருத்தித்துறையில் நேற்று 3 கடைகளில் வியாபாரம்

(புலோலி)

பருத்தித்துறை பஸ்நிலையத்தில் நேற்று மூன்று கடைகள் மட்டும் திறக்கப்பட்டிருந்தன.

வீரவாகு பத்திரிகை விற்பனை நிலையம், யாழ்ப்பாண ஐக்கிய வியாபார நிலையம், கல்யாணி ஸ்ரோர்ஸ் ஆகியனவே திறந்திருக்கக் காணப்பட்டன.

பருத்தித்துறை மினிவான்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

கென்வூட் குளிர்சாதனப் பெட்டி விற்பனைக் குண்டு. தொடர்பு; நியூ குகானந்த பவன், தட்டாதெரு சந்தி, தேனீர்க்கடை, யாழ்ப்பாணம். [C 722]

நல்ல நிலையிலுள்ள A 50 கார் கறுப்பு நிறம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: மரியநாயகம் ஸ்ரோர்ஸ், 55, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். C 656

## தவறிவிட்டது

651701708 V இலக்கமுடைய ஆனந்தமகேசன் திலக் என்பவரின் அடையாள அட்டை யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். B. J. அலோஸியஸ் அன்ட் சன்ஸ், 59/1, பெரியகடை, யாழ்ப்பாணம். (C 711)

650372077 V இலக்கமுடைய நடராசா தேவதாஸ் என்பவருடைய அடையாள அட்டை 10-02-86 இல் சங்கானையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் மினிவானுக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ''லீலாஸ் ஸ்ரோர்ஸ்'' அராலி வீதி, சங்கானை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [C 709]

11-02-86ம் திகதியன்று யாழ் நோக்கிச் சென்ற புகையிரதத்தில் சுப்பிரமணியம் சோமசுந்தரத்தின் 240432 இலக்கத் திணைக்கள அடையாள அட்டையும், C. T B. Pass உம் அடங்கிய நீல நிற கொற்ரேய்பை (Bag தவறிவிட்டது. கண்டெடுத்தவர்: த. விஜயகுமார் யாழ். கோப் டெக்ஸ், 10/1, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்குத் தொடர்புகொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். [C 725]

## தேவை

சேவிஸ் ஸ்ரேசன் வேலையில் அனுபவம் உள்ளவர்கள் (கழுவுபவர்கள்) உடன் தேவை. நேரில் வரவும். ''லக்கி சேவிஸ்'' ஸ்ரேசன், மல்லாகம். [C-707]

## கல்வி

க. பொ. த. [உயர்] 88 கலை, வர்த்தக மாணவர்களுக்கு புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 14-02-1986. தரம் 10 பரீட்சை முடிவு வரும் வரை கல்வி இலவசம். Modern Education Centre, Karaveddy. [C 592]

## சேவை

மாணவ மணிகளே! சிக்கனமே சிறந்த செல்வம்! 25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி அப்பியாசக் கொப்பி ஒனறைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க்வைற் - யாழ்ப்பாணம். [A_33]

## வாடகைக்கு

ஆனைப்பந்தி பருத்தித்துறை வீதியில் சகல வசதிகளுடன் இரு அறைகள் உள்ள மேல்மாடி (Flat) வீடு வாடகைக்குண்டு. விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்; விளம்பர இல. C-702. C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். (C 702)

## வகுப்புகள்

(1) City and Guilds of London Institute Part II-1987 [2] மோட்டார் றீவைண்டிங். [3] வயறிங் ஆகிய வகுப்புக்கள் 01-03-86 ஆரம்பமாகிறது. ஒமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [ஈழநாட்டிற்கு எதிரில்] [C 642]

A/L 88ம் ஆண்டு வகுப்புக்கள். Botany - சிவவீரசிங்கம் 14-02-86 – 3 30p.m., Physics- யோகானந்தா - 14-02-86 — 5 p.m., A/L 86ம் ஆண்டு வகுப்புக்கள் வர்த்தகவியல்- ஜெயராமன் 24-02-86-10a.m. பொருளியியல் -லோகசிங்சம்- 24-02-86—11 a. m., கணக்கியல்-வன்னியசிங்கம்- 24-02-86 -3 p.m., விபரங்கட்கு: அறிவொளி கல்விக்கழகம், 150, கோவில் வீதி, நல்லூர். [C726]

## உருக்கமான வேண்டுகோள்

7-2-86 மாலை 6 மணியளவில் எனது மகனும் செல்லப்பா அன் கொம்பனி உரிமையாளருமாகிய செ. சிறீஸ்கந்தன் என்பவரை அவரது கடையில் வைத்து அடுத்தநாள் கொண்டுவந்து விடுவதாகக்கூறி விட்டுக் கூட்டிச்சென்றீர்கள். இதுவரை கூட்டிவந்து விடவில்லை. ஆகவே அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு மிகப்பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். அவர் சென்ற நாள் தொடக்கம் நானும் அவரது மனைவியும் பிள்ளைகளும் ஊண் உறக்கமின்றி வாடுகிறோம்.

இப்படிக்கு
தாயார்.

(C 716)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
S. செபஸ்தியாம்பிள்ளை

தோற்றம்: 06-09-1916
மறைவு: 13-02-1984

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்க வேண்டுகிறோம்.

அன்பு மனைவி
ஜெயராணியும்,
மற்றும் உறவினர்களும்
86, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

A 196

## 31-ம் நாள் நினைவஞ்சலி



சரவணமுத்து
சேனாதிராசா
(இளைப்பாறிய லிகிதர், நீர்ப்பாசன திணைக்களம்)

தோற்றம்: 21-04-1910
மறைவு: 15-01-1986

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென அணைந்து விட்ட எங்கள் அன்புத்தெய்வத்தின், ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்கட்கும் எம்மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் 14-2-86ந் திகதி வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில்கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''சத்தியவாசா''
இமையாணன்;
உடுப்பிட்டி. C 724

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் பொன்னையா
பாலசிங்கம்
(கனகசபை)

தோற்றம்: 1915 03-17
மறைவு: 1986-01-15

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு திடீரென அணைந்து விட்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் ஈமக்கிரிகைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபம்தெரிவித்தவர் கட்கும் எம்மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் 14-2-86 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடனழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

59, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம். C 718

## வலி-கிழக்கு தெ. ப. ப. நோ. கூ. சங்கம்

# கட்டிட வேலைகளுக்கான கேள்வி விண்ணப்பம்

மேற்படி சங்கத்தின் கிளை இல. 2/2, 4/3 ஆகிய விற்பனை நிலையங்களின் கட்டிடங்களைக் கட்டுவதற்கான கேள்வி விண்ணப்பங்கள் மேற்படி சங்கத்தால் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 28-02-86 வெள்ளிக்கிழமை அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, ''பொது முகாமையாளர், வலி-கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி'. என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கும்படி கேட்கப்படுகின்றனர். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், ''கட்டிட வேலைக்கான கேள்வி விண்ணப்பம்'' எனக்குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப்படிவம் ஒன்று ரூபா ⁵/- செலுத்தி தலைமைக் கந்தோரில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். கட்டிடங்களில் அளவுகளின் விபரம் வருமாறு;

**(அ) நீர்வேலி வடக்கு கிளை இல. 2/2**

16 அடி. 12 அடி விஸ்தீரணம் கொண்ட இரண்டுஅறையும் 16' - 6' விஸ்தீரணம் உடைய விறாந்தையும், அஸ்பெஸ்ரேஸ் சீற் கூரையும் கொண்ட 480 ச. அடி பரப்புள்ள கட்டிடம்.

**(ஆ) கோப்பாய் வடக்கு கிளை இல. 4/3**

16' - 12½' விஸ்தீரணம் கொண்ட இரண்டு அறையும் 25' - 8' விஸ்தீரணம்கொண்ட விறாந்தையும், அஸ்பெஸ்ரேஸ் சீற் கூரையும் கொண்ட 600 ச. அடி பரப்பளவுள்ள கட்டிடம்.

பொதுமுகாமையாளர்
நீர்வேலி,
1986-02-11 A 235

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

ஈடு. இல: 1744

1. சுப்பிரமணியம் நடராசாவும் பெண்
2. நல்லம்மா இருவரும்

ஆடியபாத வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
வழக்காளிகள்.

எதிராக

1. நீக்கிலாப்பிள்ளை அருளானந்தமும் பெண்
2. மரியராணி இருவரும்

நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
எதிராளிகள்.

யாழ்ப்பாண மாவட்டக் கோட்டின் ஈடு1744ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1986ம் ஆண்டு பங்குனி மாதம் 5ந் திகதி [05-03-86] புதன்கிழமை முற்பகல் 10.00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 36,900/-ம் 07-02.83 தொடக்கம் 27-04-84 வரைக்கும் ரூபா 26 000/-க்கு 60 வீத வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 12வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 4958/20

### ஆதனவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை 'பொம்மைவெளி' நில.பர.குளி 11.7/8. ஆனால் 18-10-80ல் நில அளவையாளர் A. லாசரஸ் அளந்து விந்தாரித்த 3458 ம் இலக்கப் படத்தின்படி நில. பர, குளி 10 8ம், வீடும், வான்பயிர் செய்பயிர்களும், இதற்கு எல்லை கிழக்கு றேட்டு வடக்கு பிலிப் மரியாம்பிள்ளையின் ஆதனம் மேற்கு மரியான் பெண் அனுசிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் தெற்கு சபாபதி பெண் தங்கமுத்துவின் ஆதனம். இதடங்கலும் இதன் பதிவு இல. D/391/52]

நா. ஸ்ரீரங்கநாதன்
விற்பனவு ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

6. கன்னதிட்டி றேட்,
யாழ்ப்பாணம்,
12-02.86 C 727

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளைகுடா யுத்தம் குவைத்துக்கருகில் வந்துவிட்டது

## அமெரிக்கா கவலை தெரிவிப்பு!

[ராய்ட்டர்]

**வளைகுடா யுத்தம் ஏனைய நாடுகளுக்கும் பரவுமானுல்அது அமெரிக்க நலன்களுக்குப் பாதகமாக அமையும் என்று றீகன் நிர்வாக உயர்அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

ஈரான், தனது இராணுவம் ஈராக்கின் பெரும் பகுதியினுள் ஊடுருவி குவைத் நாட்டிற்கருகில் வந்துவிட்டதாகத் தெரிவித்ததையடுத்தே இக்கருத்து வெளியிடப்பட்டுள்ளது

இதுபற்றித் தெரிவித்த அமெரிக்க ராஜாங்க திணைக்களப் பேச்சாளர் ஒருவர், ஈரான் தனது தாக்குதலை நிறுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

குவைத் அரசாங்கமும் தனக் கருகில் வந்துவிட்ட வளைகுடா யுத்தத்தைப்பற்றி ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

இதனிடையே, அண்மையில் ஈரானினுல் மேற்கொள்ளப் பட்ட தாக்குதலின் விளைவுகள் பற்றி இரு தரப்பிலிருந்தும் பல முரணுன தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

ஈரான் 3000 ஈராக்கிய வீரர்களைத் தனது படைகள் கொன்றுவிட்டதாகவும் தெரிவித்துள்ளது. ஆனுல் ஈராக் இதனை மறுத்துள்ளது. பல இடங்களில் ஈரானிய படைகள் முறியடிக்கப்பட்டுச் சிதறியோடிவிட்டதாகவும் ஈராக் கூறியுள்ளது. [செ]

உலகச் செய்திகள்

## தாய்ப் பாலுக்கு நிகர் எதுவுமில்லை!

[லண்டன்]

நைரோபியில் கென்ய அரசாங்கம் தாய்ப் பாலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக, தாய்ப் பாலுக்குப் பதிலாக வெளிவரும் ''சகல புட்டிப்பால்'' விற்பனையையும், இறக்குமதியையும் தடைசெய்துள்ளது.

சகல மகப்பேற்று நிலையங்களிலும், ''தாய்ப் பாலுக்கு நிகர் எதுவுமில்லை; உங்கள் குழந்தைகளின் எதிர்கால நல்வாழ்வுக்குத் தாய்ப் பாலே சிறந்தது'' என்ற பெரிய அளவிலான சுவரொட்டி அறிவுறுத்தல் ஒட்டப்பட்டுள்ளது. [கெ]

## கர்னுடக முதலமைச்சர் ராஜினுமா!

(பெங்களூர்)

கர்னுடக மாநிலத்தின் முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே ராஜினுமாச் செய்துள்ளார்.

சாராயத்தைப் புட்டியில் அடைப்பதற்கான 'ஒப்பந்தம்' சம்பந்தமான வழக்கொன்றில் அரசுக்கு பாதகமான தீர்ப்பொன்று வழங்கப் பட்டது தொடர்பாகவே அவர் ராஜிமாச் செய்துள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

இத் திடீர் திருப்பத்தையடு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் மாநில ஆளுநர்திரு பானர்ஜி தமது பயணத்தை நிறுத்திவிட்டு பெங்களூர் விரைகிருர்.

இதனிடையே முதலமைச்சரின் பதவி விலகல் முடிவை மறு பரிசீலனை செய்யுமாறு தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் தந்தி மூலம் கேட்டுள்ளார். (செ)

## மணிலாவுக்கு அமெரிக்க விசேட தூதுவர்

(ராய்ட்டர்)

பிலிப்பைன்ஸில் தொடரும் அரசியல் பதற்றத்தை நீக்குவதற்காக அமெரிக்க விசேட தூதுவர் ஒருவரை அமெரிக்க ஜனுதிபதி றேகன் அனுப்பவுள்ளார்.

முன்னுள் ராஜதந்திரியான பிலிப் ஹபீப்பே இவ்வாறு செல்லவுள்ளார். திரு ஹபீப் பிலிப்பைன்ஸில் அரசியல் வாதிகளுடனும், கத்தோலிக்க மதகுருமாருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளார்

திருஹபீப்முன்னர் மேற்காசியாவில் ஒரு அமைதித்தீர்வை காண அமெரிக்காவின் விசேட தூதுவராக றேகனுல் நியமிக்கப்பட்டிருந்தார்என்பது குறிப்பிடத்தக்கது. (செ

## இலட்சார்ச்சனை

[யாழ்ப்பாணம்]

பொன்னுலை ஸ்ரீ வரதராஜப் பெருமாளுக்கு இம்மாதம் 14 ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 23 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை இலட்சார்ச்சனை நடைபெறும்.

24 ம் திகதி திங்கட்கிழமை தீர்த்த உற்சவம் நிகழும். [ப]

## ஸ்ரீராமன் ஜென்மபூமியில் பொதுமக்கள் தரிசனம்!

[புதுடில்லி]

அயோத்தியிலுள்ள ஸ்ரீராமபிரானின் ஜென்மபூமி கடந்த முதலாம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் ஆடியும் பாடியும் மகிழ்ச்சிப் பிரவாகத்துடன் ஸ்ரீராமபிரானின் ஜென்ம பூமியைக் கண்டு களித்தனர்.

நீதிமன்றத் தீர்ப்பு என்று கூறி இந்தப் புனித இடம் கடந்த 35 ஆண்டுகளாகப் பொதுமக்கள் அனுமதிக்கப்படாமல் பூட்டிவைக்கப்பட்டிருந்தது.

மாவட்ட நீதிபதி கிருஷ்ணமோகன் பாண்டே என்பவர் விடுத்த ஒரு பணிப்பின்மீது இப்புனித இடம் திறந்துவிடப்பட்டது எந்தவொரு நீதிமன்றமும் இப்புனித இடத்தைப் பூட்டிவைக்கும்படி உத்தரவிடவில்லை என்று இந்த நீதிபதி கூறினுர்.

இவ்விடத்திற்கான உரிமை மீது இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் ஏற்பட்ட தகராறு ஒன்றை அடுத்தே அது 1951ம் ஆண்டு தொடக்கம் பூட்டப்பட்டிருந்தது.

## அமெரிக்க உல்லாசப் பிரயாணிகள் வருகையில் வீழ்ச்சி!

[நியூயோர்க்]

இலங்கைக்கு அமெரிக்க உல்லாசப் பிரயாணிகள் வருவதில் தொடர்ந்து வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்ற காரணத்தால் நியூயோர்க்கிலுள்ள இலங்கை உல்லாசப் பயணச் சபை அலுவலகத்திற்கு மூடுவிழா நடைபெற்றுள்ளது!

இத்தகவலை இலங்கை உல்லாசப்பயணச் சபைத் தலைவர் திரு எச் பி. சிறிவர்த்தன வெளியிட்டுள்ளார்.

நியூயோர்க் அலுவலகத்திலிருந்த தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வாஷிங்டனிலுள்ள இலங்கை ஸ்தானிகராலயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாம்!

## வவனியாவிலிருந்து அகதிகளானவர்கள் திரும்பினுல் சில சலுகைகள்

(வவனியா)

வவனியாவில் இடம்பெற்ற வன் செயல் காரணமாக அகதிகளாக வெளி மாவட்டங்களுக்குச் சென்று அங்கு இருந்து அரசின் நிவாரணப் பொருள்களைப் பெற்றவர்கள் மீண்டும் தமது பழைய இடங்களுக்குத் திரும்பினுல் சமூகசேவை இலாகாவினுல் இரு மாத காலத்திற்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்படும்.

அந்தநேரத்தில் அகதி முகாம்களில் உள்ளவர்கள் தமது பழைய இடங்களுக்குச் சென்ருல் இரு மாத காலத்திற்கு உணவும் பொருள்களும், வீடு கட்ட ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என கச்சேரி உயர் அதிகாரி ஒருவர் கூறினுர்.

பழைய இடங்களில் சம்பந்தப்பட்டவர்கள் குடியேறிவிட்டார் என அப்பகுதி கிராம சேவையாளர் சிபார்சு செய்ய வேண்டும் என்பது ஒரு நிபந்தனையாம்.

## 6000 பேர் கலந்துகொண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு வலயத்தை அகற்றுமாறும், இராணுவ அத்துமீறல்களைத் தடுக்கக் கோரியும் பீரங்கித் தாக்குதல்களை நிறுத்தவேண்டியும் மக்கள் பேரணி சுன்னுகத்தில் நடாத்திய ஊர்வலத்தில் 6 ஆயிரத்துக்கு மதிகமான மக்கள் கலந்து கொண்டனர்.

சுன்னுகம், மல்லாகம், புன்னாலைக் கட்டுவன், மயிலணி, உடுவில் ஆகிய பகுதிகளில் உள்ள விழிப்புக் குழுக்கள், மக்கள் மன்றங்கள் போன்ற 26 ஸ்தாபனங்கள் இணைந்து இந்த ஊர்வலத்தை நடாத்தின.

குப்பிழானில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் மல்லாகம், சுன்னுகம் ஊடாக மருதனுமடத்தை அடைநதது. மருதனுமடம் சந்தை மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சுன்னுகம் பிரஜைகள் குழுத் தலைவர் திரு மாணிக்கவாசகர், ஏழாலை பிரஜைகள் குழு திரு நவுக்கரசு, மல்லாகம்பிரஜைகள் குழு முத்துலிங்கம். குப்பிளான் விழிப்புக் குழு நடனசிகாமணி, மயிலணி வடக்கு விழிப்புக் குழு லோகேஸ்கவரன், சண்முகலிங்கம் ஆகியோர் உரையாற்றினுர்கள். (ஐ)

## ● உளவாளிகள் பரிமாற்றம்

## விடுதலை செய்யப்பட்ட யூதர் இஸ்ரேல் பயணம்!

(ராய்ட்டர்)

சோவியத்யூனியனுல் விடுதலை செய்யப்பட்டுள்ள யூதரான அனடோலிஸ்வாரன்ஸ்கி நேற்று இஸ்ரேல் போய்ச் சேர்ந்தார்.

அங்கு அவருக்கு மாபெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

மேற்கு- கிழக்கு உளவாளிகள் பரிமாற்றம் ஒன்று நேற்று முன் தினம் நடைபெற்றதும், கிழக்கின் சார்பில் விடுதலை செய்யப்பட்டவர்களில் இந்த யூதருமொருவர் என்பது தெரிந்ததே.

இஸ்ரேலுக்கு விமானத்தில் வந்திறங்கிய திரு. ஸ்வாரன்ஸ்கியை பல பாராளுமன்ற அங்கத்தவர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் விமான நிலையத்தில் வரவேற்றனர். பின்னர் அவர் ஜெரூஸலேமுக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவரைக் கண்ட மக்கள் ஆனந்த மிகுதியால் அவரைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டனர்.

திரு. ஸ்வாரன்ஸ்கி விடுத்துள்ள செய்தி யொன்றில் சோவியத்யூனியனிலுள்ள தமது சக யூதர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலியப் பிரதமர் தமது செய்தியில் திரு. ஸ்வரன்ஸ்கி ஒரு பக்தி நிரம்பிய யூதர் என்று வர்ணித்தார்.

இதனிடையே அனடோரி ஸ்வாரஸ்கியையும் சோவியத் யூனியன் விடுதலை செய்யுமாயின் பதிலாக தென்னுபிரிக்காவில் சிறை வைக்கப்பட்டுள்ள கறுப்பினத் தலைவர் நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்படுவார் என்றவதந்திகளை தென்னுபிரிக்கா நிராகரித்துள்ளது. (செ)

## கச்சேரி ஓய்வூதியம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை வங்கி கச்சேரி கிளையில் ஓய்வூதியம் பெற்று வந்தவர்க்குரிய பெப்ரவரி மாதத்திற்குரிய ஓய்வூதியம் எதிர்வரும் 15 ஆம். 16 ஆம் தேதிகளான சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் கோட்டை கொடுப்பனவு காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும்.

15 ம் திகதி: சிவில் ஓய்வூதியம் பெறுவோர் சகலருக்கும்,

16 ம் திகதி: விதவைகள் அனுதைகள் ஓய்வூதியம், ஆசிரியர், ஆசிரிய விதவைகள், படைக்கல சேவிதர்கள், படைக்கல சேவிதர்களின் விதவைகள் ஆகிய மற்றையோருக்கான ஓய்வூதியமும் வழங்கப்படும்.

இக் கொடுப்பனவுகள் காலை 9 00 மணியிலிருந்து பிற்பகல் 1 00 மணிவரை செய்யப்படும்.

## இளைஞர்களை தாய்மார் சந்தித்தனர்

(யாழ்ப்பாணம்)

பலாலி, யாழ் கோட்டை இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களைப் பார்வையிடுவதற்கு, சில தாய்மார்கள் நேற்று முன்தினம்சென்றிருந்தனர்.

முகாம்களுக்குச்சென்ற தாய்மார், தங்கள் பிள்ளைகளைச் சந்தித்து உரையாடினுர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஆவதும் இல்லை அழிவதும் இல்லை
போவதும் இல்லை புகுவதும் இல்லை
தேவரும் இல்லைத் திசைகளும் இல்லை
யாவரும் இல்லை யார்தான் அறிவார்?

- சிவயோக சுவாமிகள்.

# நமது நோக்கு

## மட்டக்களப்பு பல்கலைக்கழகம்

காரணம் என்னவானாலும் காரியம் நல்லதென்றால் அதனைப் பாராட்டுவதில் நல்லெண்ணம் படைத்தவர் எவரும் தயங்கவேண்டியதில்லை

தமிழருக்கென ஒரு பிரத்தியேகமான பல்கலைக்கழகம் அவசியமென்று எடுத்த நடவடிக்கைகளில், திருகோணமலை கேந்திர ஸ்தானமாகத் தெரிவுசெய்யப்பட்டது. இதை நாடறியும். அதன் பின்பு கைவிடப்படவேண்டியிருந்தது.

கால மாற்றத்தால் கருத்தும் மாறவேண்டியிருந்தது. பேராதனையில் நாட்டுக்கென ஒரு மத்திய பல்கலைக்கழகம் என்ற கொள்கையில் பிராந்தியங்களில் வளாகங்கள் அமைக்கப்பட்டன.

யாழ்ப்பாண வளாகம் சுமார் பதினொரு வருடங்களுக்கு முன் ஆரம்பமான பின்னணி இதுவே. இன்று நாட்டில் எட்டுப் பல்கலைக்கழகங்கள் உண்டென்றால் மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரி எட்டாவது பல்கலைக்கழகமாக உயர்ச்சி பெற்றதில் என்ன வியப்பு? அதேசமயம் கீழ்மாகாண மக்களுக்கு அது ஒரு வரப்பிரசாதமென்பதால் அதற்காகநாம் அரசாங்கத்தையும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவையும் பாராட்ட வேண்டும்.

அது நிறைவேற்றப்பட்டது குறித்து அனாவசிய ஆராய்ச்சிகள் இந்த நல்ல பணிக்குத் தார் பூசுவது போல் அமையும்.

சிரேட்ட அமைச்சர் தேவநாயகத்திற்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது பற்றி நாம் எந்தச் சர்ச்சையும் கிளப்ப வேண்டியதில்லை. யார் குற்றியும் அரிசியாகட்டுமென இப்பெருஞ் சாதனையை மழுப்பவும் முன்வரவில்லை

எனவே அமைச்சர் தேவநாயகம் குறிப்பிட்டதாகச் சொல்லப்படும் செய்தி உண்மையானால் அது அரசியல் சூழ்ச்சிக்கு இடமளிப்பதை நாம் தெளிவுபடுத்த வேண்டும்.

ஆங்கிலத் தினசரி ஒன்று ஆழமற்ற முறையில் இச்சாதனையைப் புகழும்போது எவ்வாறு இரண்டாவது உலக யுத்தம் நடைபெற்ற போது இலங்கைப் பல்கலைக்கழகம் ஆரம்பமானதோ, அவ்வாறு இன்றும் நாட்டில் ஒரு போர் நடைபெறும் போது மட்டக்களப்புக்கு ஒரு பல்கலைக்கழகம் கிடைத்திருக்கிறதென்று பெருமிதம் பேசுகிறது.

இன்றையபோர் மட்டக்களப்பையும் களமாகக் கொண்டிருப்பதை யார் அறியார்? வடக்கும் கிழக்கும் இணையவேண்டுமென்றும், இணைப்பதை அனுமதிக்க முடியாதென்றும் 'போரின்' மத்தியில் இன்னொரு சொற்போர் நடைபெறுகிறதையும் யார் அறியார்?

இதற்கு இன்று ஜெனித்த பல்கலைக்கழகம் நல்ல ஆப்பு வைத்திருக்கிறதென்றால் அதனை என்னென்று சொல்வது?

ஐயா இந்தப் 'போர், இல்லாவிட்டால் இன்று இப்பெயர் மாற்றம் நடைபெற்றிருக்குமா? இதுமட்டுமல்ல இன்னும் எத்தனை திருவிளையாடல்கள் நடக்க இருக்கின்றனவோ நாமறியோம்.

நடப்பதெல்லாம் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களின் நன்மைக்குதவும் கணிசமான கொடைகளாக இருக்கவேண்டும்.

கிழக்குமாகாண தமிழ் பேசும் மக்களுக்கு சிரேட்ட கல்லூரிகள் போதாதென்றும், அங்கிருந்து உயர் கல்விபெறத் தகைமையுடையவர்களுக்கு உதவ பல்கலைக்கழகம் அவசியமென்றும் நாம் அடிக்கடி எழுதி வந்தோம்.

வடக்கில் ஒரு பல்கலைக்கழகம் அவசியமென்பதை வற்புறுத்தியவர் மட்டக்களப்பில் அவதரித்த சுவாமி விபுலாநந்த அடிகள்.

எவ்விதஅரசியல் லாபமும் கருதாத துறவியின் சிந்தனையில், முதல் யாழ்ப்பாணம், பின்பு மட்டக்களப்பு இடம் பெற்றிருந்தன.

எனவே இன்று தமிழ் மக்கள் உயிருக்கு எவ்வித பாதுகாப்புமின்றி பரிதவிக்கும் வேளையில் மட்டு பல்கலைக்கழகம் நல்ல செய்தி என்பதில் ஐயமில்லை. ஆனால் அதனை ஒரு தந்திரமாக, அரசோ அல்லது அரசின் ஆதரவாளர்களோ நினைப்பார்களாயின் இன்று இலங்கைத் தமிழர்களின் நிலைமையை இன்னும் உணராதவர்களென்று நாம் திடமாகக் கூறலாம்.

'வெம்பு கரிக்காயிரம் தான் வேண்டுமே' என்பதை மறந்துயானையைச்சின்னமாகக்கொண்ட ஐ.தே. ஆட்சி 'ஆயிரம் மீற்றரில்' பிடிவாதமாயிருக்கு மென்பதை உணராது அதனை அகற்றப் போராடுவதில் நாள் நட்சத்திரம் பார்த்து மினைக்கெடுவது போரிலும் பார்க்க பயங்கரம் மிக்க அரசியல் சூட்சிகளுக்கு இடமளிக்கும்.

மட்டக்களப்பு பல்கலைக்கழகம் வளர்ச்சியடைந்து வாழ, அந்தப் பிராந்தியத்தில் வாழும் மக்கள் பாதுகாப்பாக உயிர் வாழவேண்டும்; இன்று அந்தப் பொறுப்பு நாட்டின் தமிழ்ப் பேசும் மக்களுக்கு பொதுவாகவும் அப்பகுதி மக்களுக்கு சிறப்பாகவும் உரியதென்பதை நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

# ராணுவத்தாக்குதல் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறதாம்!

## 'சோ'வுக்கு ஜே. ஆர். பேட்டி

(நேற்றைய தொடர்ச்சி)

சோ: கிழக்குமாகாணங்களை பிரிப்பது பற்றி டட்லி சேனநாயக்க- செல்வநாயகம் ஒப்பந்தத்தில் கூறப்பட்டதல்லவா? அதாவது முன்பே கிழக்கு மாகாணங்களை இரண்டாகப் பிரிப்பது பற்றி அந்த ஒப்பந்தத்திலே கூறப் பட்டிருக்கிறது

ஜே.ஆர்: இல்லை இல்லை! அது பண்டா- செல்வா ஒப்பந்தத்தில் தான் வந்தது. வடக்கு மற்றும்கிழக்கு மாகாணங்களை அவற்றை எதுவாயினும் சரி சேர்க்கப்பட அவர் ஒப்புக் கொண்டார். நாங்கள் அதனை எதிர்த்தோம். அப்போதும் எதிர்த்தோம். இப்போதும் எதிர்க்கிறோம் அது முடியாது அதைப் பற்றி பேசவும் முடியாது.

சோ: உங்கள் கட்சி செல்வாவோடு செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தில் ஒருபகுதியில்லையா அது?

கிழக்குமாகாணத்தைப் பிரிப்பது பற்றி உங்கள் கட்சியில் கருதப்படவே இல்லை என்கிறீர்களா?

ஜே ஆர்: நாங்கள் அதைப் பற்றி விவாதிக்கவில்லை.

(ஆசிரியர் குறிப்பு; ஜயவர்த்தனா கூறியிருப்பது சரியல்ல. சேனநாயக்கா செல்வா ஒப்பந்தத்தில் கிழக்கு மாகாணத்தை இரண்டாக அதற்கு மேற்பட்ட பகுதிகளாகப் பிரிப்பது பற்றித் தெளிவாகக் கூறப்பட்டது என்பது தான் உண்யான நிலை.)

சோ: இனப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டாமா? தீர்வுக்கான அறிகுறிகள் இருந்தால்தானே (ராஜீவ்) செயலில் காட்ட முடியும்.

ஜே.ஆர்: தன்னுடையஇயக்கத்தில் வன்முறை தலைகாட்டிய போது மகாத்மா என்ன செய்தார்? இயக்கத்தை நிறுத்தி விட்டார் இந்தியாவிலிருந்துவன்முறை உற்பத்தியானால் அதைராஜீவ்காந்தி நிச்சயமாக நிறுத்த வேண்டும், விவாதத்துக்குரிய விஷயமா இது. இங்கு மக்களைக் கொலைசெய்தவர் அங்கு இருக்கிறார்கள். இன்னமும் பெண்களையும் குழந்தைகளையும் தலைவர்களையும் கொலைசெய்தவர்கள் அங்கு இருக்கலாமா?

சோ: சிங்களவர்கள் தமிழரைக் கொலை செய்யவில்லையா?

ஜே. ஆர்: ஆமாம் ஆமாம், அவர்கள் இந்தியாவில் இல்லையே! இங்குதான் இருக்கிறார்கள். நான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறேன். அவர்கள் செயலை நான் ஏற்கவில்லை.

சோ: தொடர்ந்து வந்த இலங்கை அரசுகள் ஒவ்வொன்றும் தமிழர்களுக்கு வாக்குறுதிகளை அளித்தனவே தவிர கடைசியில் கொடுத்தது மிகக் குறைவு என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கின்றீர்களா?

ஜே. ஆர்.: ஆம். முன்பு சொன்னேனே, அந்தவிடயங்களைப் பொறுத்தவரை நாங்கள் எல்லாவற்றையும் கொடுத்து விட்டோமே.

சோ: கற்பனையாக ஒரு நிலையை உங்கள்முன் வைக்கின்றேன். கணிசமான தொகையில் சிங்களவர் ஓர் அண்டை நாட்டில் வாழ்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்களுக்கு குறைகள் இருக்கின்றன. அந்த நாட்டில் தாம் வேட்டையாடப்படுவதாக அவர்கள் கருதுகின்றார்கள். அப்படி ஒரு அண்டை நாட்டில் வாழும் சிங்களவர்களுக்கு இலங்கை உதவி செய்யாதா?

ஜே. ஆர்: நிச்சயமாக உதவி செய்வோம். ஆனால் வன்முறையை அனுமதிக்க மாட்டோம். நிச்சயமாக உங்களுடைய இயக்கத்தை சாத்வீகமான முறையில் நடத்துங்கள் என்று ராஜீவ் காந்தி சொல்ல வேண்டும்.

சோ: இதைத்தானே அவர் செய்து கொண்டிருக்கிறார்.

ஜே. ஆர்.: அது எங்களைப் பற்றி. அவர்கள் அப்படிச் சொல்லவே இல்லையே.

சோ: இந்தப் பிரச்னையில் வன்முறை தீர்வு ஆகாது என்று அவர் சொல்லி இருக்கிறாரே.

ஜே. ஆர்.: அது எங்களைப் பற்றி (சிரிக்கிறார்)

சோ: இல்லை. ராணுவத்தீர்வைப் பற்றிப் பேசும் போது உங்களைப் பற்றிச் சொன்னார் எனக்களித்த பேட்டியில்.

ஜே. ஆர்: உங்கள் நாட்டுக்குப் போங்கள் என்று அவர் ஏன் தீவிரவாதிகளுக்குச் சொல்லக்கூடாது.

சோ: அவர்களை அப்படித் துரத்திவிட முடியுமா? அதன் பிறகு தமிழ் நாட்டில் என்ன நிலை தோன்றும்.

ஜே. ஆர்: அதுதான் விஷயம். தமிழ்நாடு நிலைபற்றிய பயத்தின் காரணமாக அடிப்படைக் கொள்கையில் மீறலாமா?

சோ: அப்படிக் கொள்கை மீறுவதென்றாகாது. ஆனால் ஒரு நாட்டை நிர்வகிக்கும் போது ஒரு செயலின் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்காமல் ஆட்சி செய்ய முடியுமா?

ஜே. ஆர்.: மகாத்மா காந்தி எப்பொழுதும் அப்படிப் பேசவில்லை.

சோ: நீங்கள் மகாத்மா காந்தி பற்றிச் சொல்கிறீர்கள் இந்திய முஸ்லிம் கலவரம் நிகழ்ந்த போது அவர் என்ன செய்தார், பெரும்பான்மை மக்களைத்தான் அவர் கண்டித்தார். சிறுபான்மையைஅல்ல கிறுபான்மை மக்களிடம் அவர் குறைகாணவில்லை. பெரும்பான்மை மக்களைக் கண்டித்து சிறுபான்மை மக்களுக்கு நீங்கள் பாதுகாப்பு அளியுங்கள் என்று கூறினார். இங்கு அப்படி நடக்கிறதா?

ஜே. ஆர்.: நான் வன்முறையைப் பற்றிப் பேசுகிறேன். மகாத்மா காந்தி எப்போதும் வன்முறையை ஆதரிக்கவில்லை. நல்ல முடிவைக் காண்பதற்குக்கூட.

சோ: காந்தியின் கொள்கைகளைப்பற்றி நீங்கள் அடிக்கடி கூறுவதை நான் கவனித்திருக்கிறேன், காந்தீய வழிமுறைகளை நீங்கள் மிகவும் பாராட்டுகிறீர்கள். நீங்கள் உங்கள் மக்களிடம் பேசவே வேண்டாமா? பேசி...

ஜே ஆர்.: (குறுக்கிட்டு) யாரிடம் ராணுவத்திடமா?

சோ: இல்லை. சிங்கள மக்களிடம்...

ஜே. ஆர்.: [குறுக்கிட்டு] 1983 லா?

சோ: ஆமாம்.

ஜே. ஆர்.: எங்கள் நாட்டிலும் வன்முறை எப்போதாவது நிகழ்கிறது. ஆனால் அதை நாங்கள் அடக்குகிறோம் இப்போதுகூட வடக்கில் பிரச்னை.

சோ: ஆனால் அப்போது உங்கள் பேச்சுக்களிலேயே நீங்கள் சிங்கள மக்களுக்கு இதில் [கலவரத்தில்] எவ்வித பொறுப்புமில்லை என்றும்அவர்களுடைய செயல் ஒரு இயற்கையான எதிர் விளைவுதான் என்றும் கூறினீர்களே.

ஜே. ஆர்: கிடையவேகிடையாது.

சோ: வன்முறைக்குத் தூண்டுதலாக ராணுவம் இருந்திருக்கிறது என்று நீங்கள் ஒப்புக் கொள்ளவே மாட்டீர்களா?

ஜே.ஆர்: ஆமாம் உண்மை தான். ஆனால், நான் ராணுவத்தை வாபஸ் வாங்கிவிடுவேன். பயங்கரவாதிகளை எப்படி வாபஸ் வாங்குவது? நேற்றுராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் வெறிபிடித்து சுட்டிருக்கிறார். அவர் மீது குற்றம் சுமத்தி நடவடிக்கை எடுக்கிறோம். நான் அதைச் செய்கிறேனே.

சோ: நடைமுறையில்என்ன நடக்கிறது. தீவிரவாதிகள் ஒரு இடத்தைத் தாக்குகிறார்கள். சில மணி நேரங்களுக்குப் பிறகு ராணுவம் அங்கே போகிறது. அங்கு இருக்கும் சாதாரண மக்களைத் தாக்கித் துன்பத்தைச் சுமத்துகிறது. இது ஏதோ பழிவாங்குவது போலல்லவா இருக்கிறது.

ஜே ஆர்: அது தவறு தான். ஆனால் இப்பொழுது மிகவும் குறைந்திருக்கிறது இப்பொழுது கட்டுப்பாட்டுக்குள்இருக்கிறது.

சோ: இப்பொழுது இரண்டு நாட்களுக்கு முன் கூட மக்கள் தான் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இராணுவம் தீவிரவாதிகளையா கொன்றது.

ஜே ஆர்: எங்கே அது? அங்கே ஏன் இராணுவம் போயிற்று? பயங்கரவாதிகள் அங்கு இருந்ததால் தானே?

சோ: ஆனால் அரசாங்கத்தின் ஒரு சக்தியான இராணுவம் இந்த முறையில் நடந்து கொள்ளலாமா?

ஜே ஆர்: அது தவறுதான். அதை நிறுத்த முயற்சிக்கிறோம். அவர்கள் ஆயுதங்களை விட்டு விட்டால் இராணுவம் வாபஸ் பெறப்படும்.

சோ: இந்தியா தீவிரவாதிகளைத் திருப்பி அனுப்பி விட வேண்டும் என்று சொல்கிறீர்

[5ம் பக்கம் பார்க்க]

★ இன்று கொடியேற்றம்

### ஊரெழு வீரகத்தி விநாயகன் காண்

ஊரகத்து ஒரு துணையாய் நிற்பவன்காண்
ஒளிவளரும் உள்ளமதில் உறைபவன்காண்
பாரகத்து வல்வினைகள் துடைப்பவன்காண்
பார்வதிக்கு மைந்தனாய் வந்தவன்காண்
நீரகத்தும் நிலத்தகத்தும் நிறைபவன்காண்
நித்தியமும் நினைப்பவர்க்கே அருள்பவன்காண்
சீரகத்துச் செல்வமெலாம் சேர்ப்பவன்காண்
கீர்த்திமிகு வீரகத்தி விநாயகன்காணே.

- முருகவே பரமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவத் தாக்குதல்...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கள் பிரச்னை தீர்ந்த பிறகு தானே.

ஜே ஆர்: இப்பொழுது திருப்பி அனுப்பினால் அவர்கள் மீது குற்றம் சுமத்தப் பட்டு அவர்கள் தொங்க நேரிடுமே. ஆகையால் அவர்களை ராஜீவ் காந்தி திருப்பி அனுப்புவாரா?

சோ: நான் சொல்வது இது தான்.முதலில் அரசியல் தீர்வு காணப்படுகிறது. அதன் பிறகு அவர்கள் திருப்பி அனுப்பப் படுகிறார்கள் அது தானே சரியாக இருக்கும்?

ஜே ஆர்: ஆமாம். ஆனால் அவர்கள் வன்முறையை விட்டு விடவேண்டும்.புத்தர், காந்தி, நேரு என்ற பரம்பரை உங்களுடைய வன் முறையைப் பற்றி இப்படிப் பேலமா? வன்முறை அநாகரிகமானது.

சோ: புத்தரின் பாரம்பரியம் இங்கும் ஓடுகிறது. ஆனால் இங்கு மக்கள் மற்றவர்களைக் கொன்றிருக்கிறார்கள்.

ஜே.ஆர்:அது இராணுவத்தினர் செயல் அவர்களை என்னால் கட்டுப்படுத்த முடியும்.

சோ: இராணுவத்தினர்மட்டும் அல்ல சிங்களவர்களும் செய்திருக்கிறார்கள்.

(தொடரும்)


## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சிக்கான கோழி புறோயிலர் (Broilers) வேறு இனங்களும் விற்பனை ஆகிறது. தொடர்பு கொள்ள வேண்டிய இடம்: அண்ணா பாம் செம்மாதெரு, ஜும்மா மொஸ்க்லேன், யாழ்ப்பாணம். A 237

### தேவை

மசி - பெர்குசன் உழவுயந்திர உதிரிப்பாகங்கள் விற்பனை செய்வதில் 20 வருட அனுபவமுடையவருக்கு வேலை தேவை. தொடர்பு: விளம்பர இல. C 737 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 737

### தவறிவிட்டது

பெரியதம்பி கனகரத்தினம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை வெள்ளிக்கிழமை மாலை தனியார் மினிவனில் பிரயாணம் செய்யும் பொழுது யாழ்ப்பாணத்திற்கும் வடக்கம்பரைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுங்கத்திணைக்களம் யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு தயவுசெய்து அனுப்பி வைக்கவும். C 132

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30,
முரளி—கவுண்டமணி
கீதாஞ்சலி

லிடோ சினிமா
10-30, 2-30,4-45 6-30
James Bond 007
in
Octo Pussy
(Cinemascope Colour)
[Sexy Action and Thrills]

வெலிங்டன்
10-30, 2-30,4-30, 6-30
Sean Connerr Real
Jan es Bond 007 in
THE BRIDGE TWO FAR
[Action Film]

உஷா மினி
Fire Back
இதுவரை நீங்கள் கண்டிராத நவீன இயந்திரத் துப்பாக்கியுடன் அரச படைகளுடன் மோதும் தனி ஒருவன்.
(Adults ouly)


## மட்டுநகரில் இளைஞர் கைது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு சிங்களவாடி என்ற பகுதியில் நேற்று இளைஞர் ஒருவர் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

ஆயுதப்படையினர் சம்பந்தப்பட்டவரின் சகோதரரையே கைது செய்து வந்தனர் என்றும் அவர் வீட்டில் இல்லாத காரணத்தால் அவரது சகோதரர் கைது செய்யப்பட்டார் எனவும், தாம் தேடிவந்தவர் கிடைக்கும் வரைக்கும் கைது செய்யப்பட்டவர் தடுத்து வைக்கப்படுவர் எனவும் ஆயுதப் படையினரால் தெரிவிக்கப் படுட்டது.

## தெல்லிப்பளை கால்நடை வைத்திய நிலையம்

[யாழ்ப்பாணம்]

வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளையில் புதிதாக ஒரு அரசாங்க கால்நடை வைத்திய நிலையம் 19ம் திகதி புதன்கிழமையிலிருந்து தொழிற்படவுள்ளது.

இந்த நிலையத்திற்கு யாழ்ப்பாண பிரதான கால்நடை வைத்தியநிலையத்தில் இருந்து திங்கள், புதன்,வெள்ளி ஆகிய தினங்களில் கால்நடை வைத்தியர் வருகை தந்து கால்நடைப் பண்ணையாளர்களின் தேவைகளை நிறைவு செய்ய உதவியளிப்பார். இந் நிலையம் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் காரியாலயக் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கவுள்ளது.

## அபிவிருத்திச் சங்க கூட்டம்

(பண்டத்தரிப்பு]

மாதகல் புனித சூசையப்பர் மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இம் மாதம் 22ம் திகதி சங்கத்தலைவரும், வித்தியாலய அதிபருமான திரு. அ தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

## வருடாந்த குருபூசை

[கோண்டாவில்]

கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தனவிநாயகர் ஆலயத்தில் சமாதி அடைந்திருக்கும் சுந்தைய சுவாமிகளின் வருடாந்த குருபூசை இம் மாதம் 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

## பருத்தித்துறை—

[1ம் பக்கத் தொடர்ச்சி[

சேவைகள் மருதடியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டன. போக்குவரத்துச்சபை பஸ்கள் சிவன் கோவில்சந்தியிலிருந்து சேவைகளை ஆரம்பித்துவருகின்றன.

மூடப்பட்டிருந்த அரசாங்க நிறுவனங்கள் எவையும் திறக்கப்படவில்லை. சந்தைகள் மருதடியிலும் தும்பளை வீதியிலுமே கூடியிருந்தன.

இலங்கைவங்கி, மக்கள் வங்கிகளின் சேவைகள் ஸ்தம்பித்துள்ளன.

இதே நேரத்தில் பருத்தித்துறை இராணுவமுகாம் பகுதியில் கடந்தசெவ்வாய்க்கிழமை காலை துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்கள் சில நிமிடநேரங்கள் கேட்டபோதிலும் சேதம் ஏற்படவில்லை. நேற்றுப் புதன்கிழமை எதுவிதசம்பவங்களும் பருத்தித்துறையில் இடம்பெறவில்லை.

## ஆயுதப்படை—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மாதங்களாக திருமலையிலுள்ள அகதிமுகாமொன்றில் தங்கியிருந்தனர்.

ஆயுதப்படையினர் அகதிகள் முகாமிற்கு அடிக்கடி சென்று வயோதிபர்கள் உட்பட அகதிகளைக் கூட்டிச்செல்வதனால் அச்சமடைந்த அகதிகள், யாழ்ப்பாணப் நோக்கி வர ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் இம்மாதம் 10ம் திகதி காலை திருமலையிலிருந்து ரயில்மூலம் கொழும்புக்குச் சென்று. அங்கிருந்து 11ம்திகதி நண்பகல் ரயில் மூலம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்துள்ளனர்

இவர்களில் 37பேர் பெரியவர்கள், 32 பேர் சிறுவர்கள், இதனைவிட திருமலையிலிருந்து கிளிநொச்சிக்கு வந்துதங்கியிருந்த 6 பேரைக் கொண்ட குடும்பமும், நேற்று இந்த முகாமிற்கு வந்துள்ளது

திருமலை முகாம்களில் உள்ள சுமார் 2000 அகதிகள் யாழ்ப்பாணம் வரவிருப்பதாக இங்குவந்த அகதிகள் தெரிவித்தனர்.

## சட்டஆலோசனை வழங்கினர்

[கொழும்பு]

வெலிக்கடைச் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் சிலரை சட்டத்தரணி பொன். சிவபாலன் சந்தித்து. சட்டஆலோசனை வழங்கியதுடன், குற்றப் பத்திரங்களையும்பெயளித்துள்ளார்

வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள சார்பில் அடுத்தவணை சிரேஷ்ட சட்டத்தரணி தோற்றுவதாக்கான ஆலோசனைகளையும் அவர் பெற்றுள்ளார்.


## இதய வேண்டுகோள்

பெறுமதிமிக்க நில அளவைக்கருவிகளும், எனது சொந்த உடைமைகளும் ரயில்வண்டிப் பொதிப்பெட்டி உடைக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளன. வேலைமற்றம் காரணமாக கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் இம் மாதம் ஏழாந் திகதி (7-2-86) இவற்றை ஒப்படைத்த பின்னர், காங்கேசன்துறை புகையிரத நிலையத்தில் எடுப்பதற்காகச் சென்றபோது வழியில் இவை களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. வற்றில் முக்கியமான சில கருவிகளை இழப்பின் எனது தொழிலை இழக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாவதுடன் எனது குடும்பமும் பெரிதும் பாதிப்படையும்.

எனவே இதில் சம்பந்தப்பட்டவர்களோ அல்லது புனித இயக்கங்களோ என்மீதுகருணைகூர்ந்து இவற்றை மீளத்தந்துதவுமாறு இதயத்தால் வேண்டுகிறேன். நன்றி!

ஜே. அ. விக்டர் ராசநாயகம்,
நில அளவையாளர், பத்தாவத்தை.
இணுவில்.

C 734


# மீனவர் படகு மீது...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகி, அதிலிருந்தவர்கள் கடலில் தூக்கி எறியப்பட்டனர் என்றும், இப்படகிலிருந்து தப்பிய வல்லிபுரம் யோக ராஜா [23 வயது] தெரிவித்துள்ளார்.

படகிலிருந்த ஆறுபேரும் பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நேற்றிரவுவரை இவர்கள் பற்றித் தகவல் கிடைக்க வில்லை.

### படகில் சென்றவர்கள்

சேதத்துக்குள்ளான படகில் சென்ற ஏழுபேர்களின் பெயர் விபரம் வருமாறு:

ஞானப்பிரகாசம் ஐஸ்நோபர் [28வயது இரண்டு பிள்ளைகளின் தந்தை], அல்போன்ஸ் எட்மன்ட் [19 வயது], செபஸ்தியன் கெனடி 19 வயது], யோகம் துரைமணி [35 வயது. ஆறுபிள்ளைகளின் தந்தை], அந்தோனிப்பிள்ளை ராசா [25 வயது, இரண்டு பிள்ளைகளின் தந்தை], ராசமணி அன்ரன் [22 வயது].

இப்படகில் சென்ற வல்லிபுரம் யோகராஜா, பயங்கர சம்பவத்தைத் தொடர்ந்து கடலில் தூக்கி வீசப்பட்டு, பின்னர் கடலில் நீந்தி, வேறு படகு மூலம் கரை சேர்ந்துள்ளார்

இத்துயரச் சம்பவத்தைத் தொடர்ந்து குருநகர் நேற்று முழுநாளும் சோகமயமாகக் காட்சி அளித்தது.

இப்படகிலிருந்து தப்பியவரும். வேறு சிலரும் நேற்றுக் காலை குருநகரிலிருந்து 3 படகுகளில் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச்சென்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர், (மா)

## இன்று

(யாழ்ப்பாணம்)

ஊரெழு ஸ்ரீவீரகத்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகிறது.

பன்னிரண்டு நாட்கள் திருவிழா தொடர்ந்து நடைபெற்று 13ம் நாள் (25ம் திகதி) பூங்காவனத்துடன் நிறைவுறும்.

## பொதுமக்கள் அச்சம்

(கிளிநொச்சி)

சாவகச்சேரி, கொடிகாமம், மறவன்புலோ, தனங்கிளப்பு பகுதிகளில் வழமைக்கு மாறாக கடந்த சில தினங்களாக ஹெலிகப்டர்களும் விமானங்களும் தினமும்பலதடவைகள் ஆகாயத்தில் தாழப்பறந்து வட்டமிட்டு வருகின்றன இதனால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

## ‘மின்மாற்றி’ கொள்ளை!

[யாழ்ப்பாணம்]

இலங்கை மின்சாரசபையின் யாழ் டிப்போவிலிருந்து சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான மின் மாற்றி [ட்ரான்ஸ்போமர்] கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் இரவு இக்கொள்ளைச்சம்பவம் இடம் பெற்றது.

இம்மின்மாற்றி கொள்ளை அடிக்கப்பட்டதால் மின்சாரம் பாதிக்கும் நிலை ஏற்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய தகுதிவாய்ந்த அதிகாரி

[கொழும்பு]

உள்ளூராட்சி மன்றங்கள் தோறும இயங்கிவரும் மின்சார விநியோகப் பிரிவுகளுடனும், மின்சாரப் பாவனையாளர்களுடனும் நேரடித் தொடர்புகொண்டு அலுவல்களை நிறைவேற்ற விசேஷ அதிகாரம் கொண்ட தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் நியமிக்கப் படவுள்ளதாக ஜனாதிபதி நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்

மின்சாரக் கட்டண நிலுவைகளை அறவிடுதல், மின்சார சபைக்குச் சேரவேண்டிய பணத்தைப் பெற்றுக் கொடுத்தல், மின்சாரக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை ஒழுங்காக அனுப்பிவைத்தல், கட்டணங்கள் செலுத்தப்படாத பட்சத்தில் மின் விநியோகத்தைத் துண்டித்தல், அபராதங்களை விதித்தல் போன்ற அதிகாரங்களைத் இத்தகுதிவாய்ந்த அதிகாரி கொண்டிருப்பார்.

## ‘இன்ரசிற்றி’

[1ம் பக்கத் தொடர்ச்சி)

நீக்கி ரயில் மீண்டும் செல்ல வழிசமைந்ததாகவும் ரயில் நகர்ந்து கொண்டிருந்த பொழுது ரயிலை நோக்கி திடீரென கைக்குண்டு வீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

‘இன்ரசிற்றி’வழக்கம்போல யாழ்வந்து உடன் கொழும்பு திரும்பியது யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட ‘இன்ரசிற்றியில்’ ‘மகாபொல’ புலமைப்பரிசில் பெறுவதற்காகச் செல்லும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுமே ரயில் பெட்டிகளில் நிறைந்திருக்கக் காணப்பட்டனர்.

[மா]

## கடற்படை---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த இச்சம்பவத்தில் ஆயதபாணியாக வந்த இளைஞர்கள் லொறியுடன் சேர்த்து கடற்படை முகாம் சிற்றூழியரான சி பொன்னுத்துரை என்பவரையும் மற்றும் லொறிச்சாரதி கிளீனரையும் கடத்திச்சென்றதாகவும் விசாரணையின் பின்னர் லொறிச்சாரதியையும் கிளீனரையும் மட்டுமே விடுதலை செய்ததாகவும் அறிய படுகிறது.

விடுதலை செய்யப்படாத சி. பொன்னுத்துரை என்பவர் ஏழு பிள்ளைகளின் தந்தை என்றும், பண்டத்தரிப்பைச் சேர்ந்தவர் இவ்வருடம் ஓய்வு பெற இருந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [பி)

## ஐவர் பலி—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வும், இருவர் காயமடைந்ததாகவும் ‘தமிழீழ விடுதலைப் புலிகள்’ சென்னையில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு பதினொரு மணியளவில் ஒலுப்பையடிச்சேனையில் தமது இயக்கத்தைச் சேர்ந்த நான்கு போராளிகளும் ஒருவழிகாட்டியும் வீதியில் சென்றுகொண்டிருந்தபொழுது இராணுவத்தினர் பதுங்கியிருந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் இரு போராளிகள் ஸ்தலத்திலேயே பலியானார்கள் என்றும் மற்றைய இருவரும் இராணுவத்தினரை நோக்கி ‘கிறனேட்டு’ களை வீசிவிட்டு தப்பிஓடிவிட்டனர் எனறும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## நால்வர் ‘கைது’

(புலோலி)

பருத்தித்துறையில் காட்டிக் கொடுக்கும் நால்வரை ‘தமிழீழ விடுதலைப் புலிகள்’ கைது செய்து வைத்திருப்பதாக பருத்தித்துறை நகரில் ஒட்டப் பட்டுள்ள ‘தமிழீழ விடுதலைப் புலிகளின் எச்சரிக்கையில்’ குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையெழுத்துப்படிவங்களுடன் மக்கள் கருத்தும் இணைக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு அனுப்பப்படும் கையெழுத்துப் படிவங்களுடன், தமிழ் பேசும் மக்களின் கருத்துக்களை எடுத்துக்கூறும் தீர்மானத்தையும் இணைத்து அனுப்புவதென்று நேற்று யாழ்ப்பாணத்தில் கூடிய பிரசைகள் குழுவின் இணைப்பு குழு தீர்மானித்துள்ளது.

நல்லூர் இந்து விடுதியில் பேராசிரியர் கே. சிவத்தம்பி தலைமையில் நேற்று நடந்த கூட்டத்தில் சுமார் 25 பிரஜைகள் குழு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கையெழுத்து இயக்கத்தின் முன்னேற்றம் பற்றி விமர்சிப்பதற்காக இக்கூட்டம் நடைபெற்றது.

பிரஜைகள் குழு உறுப்பினர் கையெழுத்திட்ட படிவங்களை சமர்ப்பித்ததுடன், புதிய படிவங்களை வாங்கிச் சென்றனர்.

கையெழுத்து சேர்க்கும் இறுதித்திகதி இம்மாதம் 15-ம் திகதியிலிருந்து மார்ச் முதலாம் திகதிவரை நீடிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கையெழுத்து இயக்கத்தின் நடைமுறை விபரங்கள் பற்றி கலந்துரையாலல் நடந்தபோது கையெழுத்து படிவங்களில் ஜனாதிபதிக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள், எவ்வித சந்தேகத்திற்கும் மாற்று விளக்கங்களுக்கும் இடம் கொடாத வகையில் அமைய வேண்டும் என்று பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டது.

பல்வேறு பிரஜைகள் குழு அங்கத்தினர் எடுத்துக்கூறிய கருத்துக்களை ஆராய்ந்த பின்னர் மக்களின் விருப்பத்திற்கிணங்கிய இவ் வேண்டுகோளை மிகத் தெளிவான முறையில் எடுத்துக் கூறியதுடன் கையெழுத்து இயக்கம் தோன்றிய நாளின் பின்னர் இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளின் தாக்கங்களையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

கையெழுத்துப் படிவங்களை அனுப்பும்போது இத்தீர்மானத்தையும் சேர்த்து இணைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மக்களின் கருத்துக்களை எடுத்து கூறும் தீர்மானம்பற்றி முடிவுசெய்ய இம்மாதம் 26-ம் திகதி கூடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. (க)

## மேலும் 5 தமிழ் மாணவிகள் கைது

(மூதூர்)

மூதூரிலுள்ள அகதிகள் முகாமில் தங்கியிருந்தவர்களில் மேலும் 5 தமிழ் மாணவிகள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

ஏற்கனவே கைது செய்யப்பட்ட மாணவிகளுட்பட இளம் பெண்களுடன் மேலும் 15 பேர் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காகத்தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இளம் பெண்கள் கைது செய்யப்படுவது குறித்து பெற்றோர் மத்தியில் பெரும் அதிர்ச்சியும் அச்சமும் ஏற்பட்டுள்ளது.

முகமூடி தலையாட்டி உருவத்தைக்கொண்டு இப்பெண்கள் கைது செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் இன்று திருமலை, மூதூர்ப்பகுதிகளில் கைது செய்யப்பட்டு பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை பார்வையடுவதற்கு பெற்றோரைக் கொண்ட குழு ஒன்று பிரஜைகள் குழுவுடன் இன்று செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## காங்கிரஸ் விழா செலவு ரூ. 15 கோடி

[பம்பாய்]

பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் நூற்றுண்டு விழாவிற்கு, 15 கோடி ரூபா செலவிடப்பட்டதாக காங்கிரஸ் விழாக்கமிட்டி அறிவித்துள்ளது.

இம்மாநாடு மூன்று தினங்கள் நடைபெற்றது.

மாநில முதலமைச்சர்கள், கட்சித் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் நட்சத்திர ஹோட்டல்களில் தங்கிய செலவுகள் உட்பட பல்வேறு செலவினங்களுக்கும் இப்பணம் செலவிடப்பட்டுள்ளது. (கெ)

## அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள்

[மானிப்பாய்]

சாவற்கட்டு பாடசாலை அபிவிருத்திச் சபையின் கூட்டம் மகாத்மா சனசமூக நிலையத்தில் திரு. எஸ்பரமகுரு தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் எஸ் பரமகுரு, உபதலைவர் வி. வேலும்மயிலும், செயலாளர் இ மனோகரன் உபசெயலாளர் என், புவனேந்திரன், பொருளாளர், ரு. குணசிங்கம் ஒன்பதுபேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## மினி பஸ் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணையிலுள்ளஒரு தனியார் நிறுவனத்தின் களஞ்சிய அறை உடைக்கப்பட்டு 3 லட்சம் ரூபா பெறுமதியான மினி பஸ்ஸும் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெறுமதியுள்ள லொறி உதிரிப் பாகங்கங்களும் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

நேற்று அதிகாலை இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதியிலுள்ள ஈ. எஸ். பேரம்பலத்தின் களஞ்சிய அறையிலிருந்து லொறி உதிரிப் பாகங்களும் அங்கு விடப்பட்டிருந்த நா. சண்முகசுந்தரத்துக்குச் சொந்தமான மினி பஸ்ஸும் கொள்ளை அடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொருளாதார கலாசார வளர்ச்சிச் சங்கத்தால் நடத்தப்படும் விளையாட்டுக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி முடிவுகள் வருமாறு:

இம்மாதம் நான்காம் திகதி நடைபெற்ற போட்டியில், காங்கேசன் சீமேந்து பொழுதுபோக்குக் கழகம், அளவையுத் 'பி' பிரிவை எதிர்த்து விளையாடி 2—1 கோல்களால் வெற்றியீட்டியது.

இதேதினம் இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் பங்குபற்றிய அளவெட்டி செங்கதிர் விளையாட்டுக் கழகம், அராலி சில்வெஸ்டர் விளையாட்டுக் கழகத்தை 2—1 கோல்களால் வென்றது.

5-ம் திகதி நடைபெற்ற போட்டிகளில் மயிலிட்டி சண்ணகி விளையாட்டுக் கழகம் 9—0 கோல்களால் அளவெட்டி மரினு விளையாட்டுக் கழகத்தை வென்றது.

அளவெட்டி டயனு விகவை எதிர்த்து விளையாடி தெல்லிப்பளை கிருஸ்கோப்பாஸ் விளையாட்டுக் கழகம் 2—1 கோல்களால் வெற்றியீட்டியது.

இம்மாதம் 6-ம் திகதி நடைபெற்ற கால்இறுதிப் போட்டியில் காங்கேசன் சீமேந்து பொழுது போக்குக் கழகமும் தெல்லிப்பளை கிருஸ்கொப்பாஸும் எதிர்த்து மோதி வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்தன.

7-ம் திகதி இடம்பெற்ற கால்இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை கிருஸ்கொப்பஸ் வி. க. அளவை யுத் விளையாட்டுக் கழகத்துடன் மோதி 4—1 கோல்களால் தோற்றது.

10-ம் திகதி இறுதிப் போட்டியும்பரிசு வழங்கலும் நடைபெறும் (வி)

## தற்பாதுகாப்புப் பற்றி துண்டுப்பிரசுரம் விநியோகிக்க ஏற்பாடு

(மாவிட்டபுரம்)

இன்றைய சூழ்நிலையில் பொதுமக்கள் எவ்வாறு தற்பாதுகாப்பு முறைகளை கையாளவேண்டும் என்று குறித்து துண்டுப்பிரசுரம் வெளியிட்டு மக்களுக்கு விநியோகிப்பதென காங்கேசன்துறை பிரஜைகள் குழு தீர்மானித்துள்ளது.

காங்கேசன்துறை பிரஜைகள் குழு அங்குராப்பணக் கூட்டம் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

சட்டத்தரணி திரு. அ. குமரகுரு தலைமையில் நடந்த மேற்படி கூட்டத்தில் கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: அ. குமரகுரு. துணைத் தலைவர்கள்: மு இரத்தினசிங்கம், க. ஜீவரத்தினம். செயலாளர்: செல். பாலசுந்தரம்' துணை செயலாளர்: செ ரதமோகன், பொருளாளர்: ஏ, செல்வராசா. நிர்வாகசபை உறுப்பினர்களாக பொ. சின்னத்துரை, வ. தி செல்வராசா, வி. ஜெகதீசன், க கருணகரன், த. மகாதேவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## யாழ். பல்கலைக்கழகத்தில் முருகையனுக்கு புதிய பதவி

[வவுனியா]

வவுனியா மாவட்ட பிரதேசகல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியகவிஞர் திரு. இ. முருகையன் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளரான புதிய பதவியை விரைவில் ஏற்றுக் கொள்வார் என்று தெரிகின்றது இவர் வகித்துவந்த வவுனியா கல்விப் பணிப்பாளர் பதவிக்கு திரு. வி சபாநாயகம் புதிதாக பதவி ஏற்றுள்ளார் இவர் திருகோணமலை, மலையகத்தில் கூடுதல் காலம் பணியாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ரயிலில் சென்ற இளைஞர் கைது!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையைச்சேர்ந்த ராஜேந்திரன் [30 வயது] என்பவர் ரயிலில் செல்லும் போது, வவனியாவில் வைத்துக் கைது செய்யபபட்டுள்ளார்.

இவர் கைது செய்யப்பட்டது சம்பந்தமாக யாழ் அரசாங்க அதிபரிடம் முறையிடப்பட்டுள்ளது. (மா)

## அரிசி, மா கப்பல்கள்

[சுண்டுக்குளி]

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு 950 மெட்ரிக் தொன் நிறையுள்ள கோதுமை மாவுடன் 'சரண்டீப்' என்ற கப்பலும் 1000 மெட்ரிக் தொன் நிறையுள்ள அரிசியுடன் 'தங்காலை' என்னும் கப்பலும் வந்துசேர்ந்துள்ளன.

இதேநேரத்தில் காங்கேசன் துறைநோக்கி விடப்பட்ட மற்றுமொரு மாக்கப்பல் காலிக்கு மாற்றப்பட்டுள்ளது.

## மின் கம்பத்திற்கு சிறுமி பலி

(யாழ்ப்பாணம்)

மின் கம்பத்திற்கு 4 வயதுச் சிறுமி பலியானார்!

இணுவிலைச் சேர்ந்த ஜெதனியின் மரண விசாரணையில் இத் தகவல் தெரிய வந்துள்ளது. யாழ் மரண விசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்தினார்.

இச் சிறுமி வீட்டின் முன் பாக விளையாடிக் கொண்டிருந்த போது யாழ். மாவட்ட சபையின் உடுவில் கிளையின் பொறுப்பிலுள்ள மின் கம்பம் முறிந்து விழுந்து சிறுமியின் காலில் முறிவு ஏற்பட்டு சத்திர சிகிச்சைக்குப் பின் மரணமானார் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. விசாரணை முடிவில் விபத்து மரணமென தாப்பளிக்கப்பட்டது. [க]

## பாலர் பாடசாலைக்கு புதிய கட்டடம்

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டைக்கு அருகாமையிலுள்ள சவற்கட்டுப் பாடசாலை அபிவிருத்திச் சபையினரின் முயற்சியால் புதிய பாலர் பாடசாலை யொன்று கட்டப்படவிருக்கிறது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா அடிக்கல்நாட்டி வைக்கவிருக்கின்றார். சாவற்காட்டுப் பாடசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. எஸ். பரமகுரு தலைமையில் இவ் விழா நடைபெறவிருக்கிறது.

## கொக்குவில் ஒய்வூதியம் திகதி மாற்றம்

[யாழ்ப்பாணம்]

இம் மாதம் 17ம் திகதி கொக்குவில் தபால் கந்தோர் ஒய்வூதியம் வழங்கப்படும்.

என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 26ம் திகதி புதன்கிழமையே இத் தபால் கந்தோர் ஒய்வூதியம் வழங்கப்படும் என்று நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய தபால் கந்தோர் ஒய்வூதியங்கள் முன்னைய அறிவித்தலின் படி வழங்கப்படும். [ஐ]

## யாழ். ஆஸ்பத்திரியில்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் விட்டமின் மருந்து (குளிசை) வகைகளுக்குத் தட்டுபாடு நிலவுகிறது.

வெளி நோயாளர் பகுதியில் மருந்து பெறும் நோயாளர்களுக்கு விட்டமின் குளிசை வகைகளை வெளியில் வாங்கும் படி துண்டு கொடுக்கப் படுகிறதாம் [ஐ]

## ஜனாதிபதிக்கு மகஜர்

[யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு வலயத்தை நீக்குமாறு, பீரங்கித்தாக்குதலைநிறுத்துமாறும் கோரி வலி-தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பிரஜைகள் குழுத் தலைவர்கள் கையொப்பமிட்டு மகஜர் ஒன்றினை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இம்மகஜர் உடுவில் உதவி அரசாங்க அதிபர் ஊடாக அனுப்பப்பட்டுள்ளது. [ஐ]

## விடுதலை

(வவுனியா]

வவனியாவில் குருமன்காடு இல்லத்தில் இருந்த போது ஆயுதப் படையினரால் விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்ட முன்னாள் கமநலசேவை செட்டிகுளப்பகுதி மாவட்ட அதிகாரியான சிவநேசன் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## இன்றைய பலன்

மாதம்- மாசி
திகதி- 1 (1986-2-13)
கிழமை- வியாழன்
திதி- சதுர்த்தி காலை 7-45ன் மேல் பஞ்சமி
நட்சத்திரம்- ரேவதி பின் இரவு வரை

மேடம்: இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம் பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவர். பொருள்வரவிற்குமிடமுண்டு.

இடபம்: சகோதர வழியால் மனதில் சஞ்சலம் தோன்றும். உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும். உஷாராக இருக்கவும்.

மிதுனம்: விளைபொருள் விருத்தியுடன் விருந்துக்கும் இடமுண்டு. தாய்வழித் தனமும் தாராளமாகக் கிடைக்கும். சிறப்பான தினம்.

கடகம்: தெளிந்த மனம் தெய்வசிந்தை. தேடியது கிடைக்கும். சிறப்பான தினம்

சிங்கம்: முன்னேற்றப் பாதையில் தடைகள் பல தாக்கும். இருள்படர்ந்த சம்பவமொன்று மீண்டும் நினைவுக்கு வரும். கடமையில் கவனம் செலுத்தவும்.

கன்னி: குளுமையான சம்பவங்கள் இடம்பெறும். வாழ்க்கையில் பசுமை தோன்றும். களஸ்திர வழியாலும் நன்மையுண்டு.

துலாம்: தொல்லைகள் அதிகரிக்கும். மன நிம்மதியைத் தேடி அலைவீர்கள். குடும்பத்திலும் சிறு பிணக்குக்கிடமுண்டு

விருச்சிகம்: தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். தெய்வநம்பிக்கை மேலிடும். நினைத்ததைச் சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

தனுசு: தொழில் நிலை மந்தங் காணும். தொல்லைகள் கூடும். வணிகர்களாயின் அதிக முதலீட்டைத் தவிர்க்கவும்.

மகரம்: முயற்சியல் முட்டுக்கட்டை தோன்றும். மன நிலை சோர்வுக்கிடமுண்டு. பணமுடக்கமும் ஏற்படலாம்.

கும்பம்: எதிர்பாராத செலவுகள் அதிகமாகும். பிணிக்கிடங்கொடாது சுகாதாரத்தைப் பேணவும்.

மீனம்: முன்னேற்றம் தடைப்படும். குறுக்கு வழித் தலையீடு குழப்பத்தையேற்படுத்கலாம். உடல் நலத்தைப் பேணவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கிராம அபிவிருத்திச் சங்கப் பணி மகத்தானது"

(யாழ்ப்பாணம்)

"சிவில் நிர்வாகம் பலம் குன்றியிருக்கும் இவ்வேளையில் கிராம அபிவிருத்திச்சங்கங்கள் தமது தலைமைகளை மறுசீரமைத்து உற்சாகமுள்ள உத்தியோகத்தர்களைத் தெரிந்து தத்தமது கிராமங்களது அபிவிருத்திகளில் ஈடுபடுபடுதல் வேண்டும்."

இவ்வாறு துன்னாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப்பேசிய திரு. சி. இரத்தினசிங்கம் குறிப்பிட்டார்.

கட்டைவேலி ஐக்கிய மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு இப்பகுதி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் வேரோண்டை மயானத்துக்குரிய பாதை கடந்த மழை வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளது பற்றியும் சட்டவிரோத மின்பாவனை பற்றியும் ஆலோசிக்கப்பட்டன.

இறுதியில் புதிய உத்தியோயோகத்தர்கள் தெரிவு நடைபெற்றது. தலைவர்; சி. இரத்தினசிங்கம் பொதுச் செயலாளர்; மு. சிறிஸ்கந்தராசா, பொருளாளர்: ந. கயிலாயர், உபதலைவர்; இ. பெரியதம்பி, உதவிச் செயலாளர்: பொ. கந்தசாமி, ஒன்பது நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பெற்றனர். (ஐ)

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணிலே:25-01-1963

விண்ணிலே:13-02-1985

என் அன்பு மகனே!

புறநானூறு காட்டும் வீரப்பண்பொடு வீரமரணம் அடைந்திருக்கின்ருய். இப்பெருமையோடு நாம் ஆறுதல் அடைகிருேம். உன்னை ஈன்ருேர்க்கும், உடன் பிறப்புகளுக்கும் இப்படி ஒரு ஆறுதல் சொல்வதையன்றி நாம் என்ன செய்ய. நீ உனது இரத்தக்கறையை மண்ணில் விட்டாய். அன்றில் இருந்து இன்றுவரை எமது நெஞ்சங்களின் குமுறல்களை நீ யறியாயோ. நீ சிந்திய இரத்தம் இம்மண்ணுடன் கலந்து ஓராண்டு சென்ருலும் எம் நெஞ்சங்கள் இன்றும் உனக்காக இரத்தம் சிந்துகிறதடா. உனது ஆத்ம சாந்திக்காக வேண்டிநிற்கும்,

அம்மா, ஐயா,
சகோதரர்கள்,
அப்பப்பா, அம்மம்மா:
பெத்தா,உறவினர்கள்,
நண்பர்கள்.

720. ஏகாம்பரம் வீதி,
உப்புவெளி,
திருகோணமலை.

[C 723]

## காரைநகரில் மறியல் போராட்டம்

[வண்ணார்பண்ணை]

காரைநகர் வடக்கு கிராம உப அலுவலக முன் மறியல் போராட்டம் நடத்தப் போவதாக யாழ் மாவட்டச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வரியிறுப்பாளர்களின் சார்பில் காரைநகர் தங்கோடை கிராம அபிவிருத்திச்சங்கம் இத்தகவலை யாழ் செயலகத்திற்கு அறிவித்துள்ளது.

மின்மாற்றி அமைத்தலில் தாமதம், இரவில் மின்சாரத் தடைப்படல், வீதிகளின் மின் இணைப்புக்கள் சீராக்கப்படாமை, புதிய இணைப்புக்கள் வழங்கப்படாமை போன்ற பத்துக் குறைபாடுகளையும், காரைநகர் வடக்கு உப அலுவலகம் இரண்டு வாரகாலத்தில் நீக்காவிடில் வரியிறுப்பாளர்கள் பொது மக்கள் கொண்ட மறியல் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவிருப்பதாக அந் அறிவித்தல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் தங்கோடை கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. எஸ் விக்கினேஸ்வரன், தலைவர் திரு கே. வி. துரைராசா ஆகியோர் இப் போராட்ட அறிவித்தலில் கை ஒப்பமிட்டுள்ளனர்.

## தவக்காலச் சிந்தனை



### 2ம் நாள்

"ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தன்னையே பாழாக்கினுல் பயன் என்ன?" [லூக்9/25]

மனிதன் தனது வாழ்க்கையில் பல வகையா எதிரிகளை எதிர்கொள்ளுகின்ருன். பணம் சார்பாக, பொருள் சார்பாக, இன்பம்சார்பாக போராடும் எதிராளிகளை விட தானே தனக்குப் பிரதான எதிரியாகிருன். தனக்காக மட்டும் வாழ்கின்ற தன்னலம் இன்று மனித சமுதாயத்தை சீரழியச்செய்து வந்துள்ளது.

இன்று தனக்காகத் தன் குடும்பத்திற்காக தனது இனத்திற்காக மட்டும் வாழும் சுயநலமே மனிதனை மோசமடையச் செய்து வந்துள்ளது இந்த இழப்பின் உச்சக்கட்டத்தில் அனைத்து நற்பண்பாடுகளையும் இழந்து அந்நியமயமாக்கப்பட்ட நிலையில் அநாதரித்து அவன் காணப்படுகின்ருன். உலக செல்வங்கள் அனைத்திற்கும் உரித்தாளரான நிலையிலும் தன்னையே இழந்து தவிக்கிருன்.

எனவே மனிதன் உலக செல்வங்களுக்கு முதலிடம் கொடுக்கக்கூடாது. பொருள் சார் எண்ணங்களுக்கு முதலிடம்கொடுக்கக்கூடாது. மாருக மக்களுக்காக வாழ்கின்ற உயர்பண்பாட்டில் வளர்ந்து மனித உள்ளங்களை வாழவைக்க முயற்சியெடுக்க வேண்டும். இலகுவில் அவன் தனது இலக்கினைத் தவறவிடாது இறைவனையும் இறை மக்களையும் மையமாக வைத்து வாழ வேண்டும்.

வின்சென்ற் பற்றிக்
அ. ம. தி

## ரூபவாஹினி

மாலை:
5-00 செய்திகள்
5-05 கார்ட்டூன் தொடர் நிகழ்ச்சி
5-30 ஆங்கில போதனை நிகழ்ச்சி
5-45 'உங்களால் முடியுமா'
6 00 சிறுவர் நிகழ்ச்சி
6-30 செய்திகள் [தமிழ்]
6-55 நாடகாசிரியர்களை அறிமுகப்படுத்தல்
7-30 'அலோகோ உடபாடி' ரெலி நாடகம்
8-00 செய்திகள் [சிங்களம்]
8-20 ரெலி நாடகம் [தொடர்ச்சி]
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
9-20 'மைன்ட் யுவர் லங்குவேஜ்'
9-55 உலக யுத்தம்
10-50 ஒளிபரப்பு முடிவு

## அம்பாள் ஆலய உற்சவம்

[இணுவில்]

இணுவில் வட்டுவினி பதியுறை திருவருள்மிகு கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பித்து பன்னிரண்டு நாட்கள் வரை நடைபெறும்.

தினசரி உற்சவத்தைத் தொடர்ந்து மாலை நேரத்தில் சுப்பிரமணிய சாஸ்திரிகள் கிரியா விளக்கவுரை நிகழ்த்துவார்.

## இஸ்லாமிய புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இஸ்லாமிய புத்தகக் கண்காட்சி ஒன்று இவ்வருடம் மே மாதத்தில் கொழும்பில் நடைபெறவுள்ளது. இதுசம்பந்தமாக ஒருகூட்டம் இஸ்லாமிய இளைஞர் கவுன்ஸிலின் தலைவர் ஜனாப். கே. எம். ஹசன் தலைமையில் அகில இலங்கை முஸ்லீக் இளைஞர் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கண்காட்சி சம்பந்தமான விடயங்களைக் கவனிக்க ஜனாப் கே. ஏ. ஹசனைத் தலைவராகவும், ஜனாப். ந்சரு இஸாடீன், ஜனாப். எம். எர். முனைவர் ஆகியோரை இணைச் செயலாளராகவும், ஜனாப். என். எம் அமீனை பொருளாளராகவும் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதன் முதலாக முஸ்லீம் எழுத்தாளர்களுக்காக நடத்தப்படும் கண்காட்சி இதுவாகும். கண்காட்சியில் உள்ளூர் இலங்கை எழுத்தாளர்களின் புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பல்வேறு வெளியீடுகள் இடம்பெறும் மேலதிக விபரங்களுக்கு முஸ்லீம் புத்தகக்கண்காட்சிக்குழு 27/1 ஃபெயர்பீல்ட் கார்டன்ஸ் கொழும்பு-8 என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றது.

## மயிலிட்டி வடக்கு சுடலையைப் புனரமைத்துத் தரும்படி கோரிக்கை

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி வடக்கு மக்களுக்கு என இருக்கும் ஒரே சுடலையைப் புனரமைத்துத் தரும்படி மயிலிட்டி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ், அபிவிருத்திச் சபை காங்கேசன் துறை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரைக் கேட்டுள்ளது.

"மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலைக்கு அருகில் உள்ள சுடலையொன்றே மயிலிட்டி வடக்கு மக்களுக்கு உள்ளது. ஆனுல் அச்சுடலையின் எல்லைகள் குறைந்துகொண்டு போகிறது. ஆகவே காணியை அளந்து எல்லையை வைத்து மதில் கட்டவேண்டும். அத்துடன் சுடலைக் காணி பற்றைகள், செடிகள் வளர்ந்து காடாகக் காட்சியளிக்கின்றது. அதைத் துப்புரவுசெய்துதவ வேண்டும்.

"மேற்படி சுடலை மடம் பல பல வருடங்கள் சேதமடைந்துள்ளது அதையும் சீர்செய்து தரவேண்டும்" என மகஜர் மூலம் கேட்கப்பட்டுள்ளது.

## மனித உரிமை மீறல்: நிக்கரகுவாவை மன்னிப்புச்சபை சாடுகிறது

[ராய்ட்டர்]

சர்வதேச மன்னிப்புச்சபை [அம்னெஸ்டி இன்டர் நேஷனல்] மனித உரிமைகளை மீறியதற்காக நிக்கரகுவாவைச் சாடியுள்ளது.

சபையின் அண்மைக்கால அறிக்கையொன்றில், நிக்கரகுவாவின் ஆளும் சன்டினிஸ்டா அரசாங்கம் தனது அரசியல் எதிரிகளை சித்திரவதை செய்து வருவதைக் குறிப்பிட்டுள்ளது

அரசின்கொள்கைகளை எதிர்க்கும் வழக்கறிஞர்கள், குருமார், தொழிற்சங்க வாதிகள் ஆகியோர் சிறைக்கூடங்களில் அடித்துத் துன்புறுத்தப்படுவதாகவும் நிக்கரகுவாவில் உள்ள மெக்ஸிக்கோ இந்தியர்கள் திடீர் திடீரென மறைவதாகவும் இவ்வறிக்கை மேலும் கூறுகிறது.

இதனிடையே நிக்கரவாகுவா சன்டினிஸ்டா அரசை எதிர்க்கும் 'கென்ரா' கிளர்ச்சியாளர்களும் தமது எதிரிகளை சித்திரவதைக்குள்ளாக்கி மரணதண்டனை அளித்து வருவதாகப் இச்சபை தனது அறிக்கையில் கூறியுள்ளது. [செ]

## பிரபாகரன் யாழ்ப்பாணம் வந்துள்ளாராம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆணை பிறப்பிக்கும் அதிகாரி திரு பிரபாகரன் தற்பொழுது யாழ்ப்பாணம் வந்துள்ளாராம்

இவ்வாருன ஒருசெய்தி 'திவ்யன' பத்திரிகையில் வெளியாகியுள்ளது.

திரு. பிரபாகரன் யாழ்ப்பாணம் வந்திருப்பதற்கான தகவல்கள் ஆயுதப் படைகளுக்குத் தெரியவந்திருப்பதாகவும் அச்செய்தி கூறுகின்றது. இதே சமயம் தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின் இன்னொரு தலைவரான திரு சிறிசபாரத்தினம் வெளிநாட்டவர் இருவருடன் இங்குவந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிருர் என்ற செய்தியையும் ஆயுதப் படையினர் அறிந்துவைத்துள்ளதாகவும் அச்செய்தி கூறுகின்றது.

இத்தகவல்களையடுத்து ஆயுதப் படையினர் வாகனங்களைத் தீவிரசோதனைக்குட்படுத்திவருவதாக அச்செய்தி கூறுகின்றது.

வெகு விரைவில் வடக்கில் பெரும் தாக்குதலொன்றை மேற்கொள்வதற்காக இவ்விருவரும் வள்ளங்கள்மூலம் இலங்கை வந்திருக்கலாமென ஆயுதப் படையினர் கருதுகிருர்களாம்.

## சுருக்கெழுத்துப் பயிற்சி நிலையங்கள் அமைப்பு

[புலோலி]

வடமாராட்சி சுருக்கெழுத்துக்கழகம் யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் தலா இரண்டு ஆங்கில சுருக்கெழுத்துப்பயிற்சி நிலையங்களை ஆரம்பித்து கிராமிய இளைஞர், யுவதிகளுக்குச் சேவை செய்யவுள்ளது.

சமூக சேவையில் நாட்டமுடைய சுருக்கெழுத்துக் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் இக்கழகத்திற்கு தமது விண்ணப்பங்களை 28-2-86க்கு முன் அனுப்புமாறும், பயிற்சி நிலையங்களைத் தமது கிராமத்தில் அமைக்க விரும்பும் பொதுசன சேவை நிறுவனங்கள் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கழக அமைப்பாளர் திரு. வி. சிவச்சந்திரதேவன் அறிவித்துள்ளார்.


## பிரயாண ஒழுங்குகள்

டுபாய், அவுஸ்திரேலியா, மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படுகின்றன. மற்றும் அவசரகால பாஸ்போட். பாஸ்போட், விசா, விமான ரிக்கட், பயணக் காசோலைகள் மற்றும் சகல நாடுகளுக்கு விமான ரிக்கட்டுகளுக்கு உடன் தொடர்புகொள்ளுங்கள்.

ரஜீவன் டிரவல்ஸ்,
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 (C712)

## For Sale

LATEST MODEL JVC GX. 59C CAMERA
Peformance (Auto Zooming) (Two Speed)
Auto White Balance
and NATIONAL N V 100 PORTABLE DECK

Tele Corner,
MODERN MARKET, CHAVAKACHCHERI.
(C 697)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# "ஐக்கியத்தை குலைப்பது எமது நோக்கமல்ல"

## 'ஈரோஸ்' பதில் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''தமது அமைப்பு ஐக்கியத்தைக்குலைக்கும் சக்தியல்ல என்பதும், ஏனைய இயக்கங்கள் மீது ஆளுமை செலுத்தும் எண்ணங் கொண்டவர்களல்ல என்பதும் அனைவருக்கும் வெளிச்சமானது'' என்று 'ஈழப்புரட்சி அமைப்பு' (ஈரோஸ்) விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் இரு தோழமை இயக்கங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள பிரச்னையையிட்டு 'ரெலோ' கடந்த 7ம் திகதி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அந்த அறிக்கை தொடர்பாக 'ஈரோஸ்' அமைப்பு பின்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

''சுமார் மூன்று மாதங்களுக்கு முன் ஒந்தாச்சி மடத்தில் எமது இயக்கப் பெயரைச் சொல்லி உறுப்பினர் ஆறு பேர் சூரியா அரிசியாலையில் கொள்ளையிட்டுள்ளனர். இக் கொள்ளைக்குத் தலைமை தாங்கி வந்த 'ரெலோ' உறுப்பினரின் பெயரும் விபரமும் எம்மிடமுண்டு.

''இச்சம்பவத்தை அடுத்து எமது இயக்க முக்கிய உறுப்பினர் ஒருவரின் வீட்டில் சுமார் ஒரு மாதத்திற்கு முன் இன்னொரு கொள்ளையும் செய்துள்ளனர். இக்கொள்ளையில் சுமார் ஒரு லட்சம் பெறுமதி வாய்ந்த நகைகளும் பணமும் 'ரெலோ' உறுப்பினரால் எடுத்துச் செல்லப்பட்டதுடன் அவ்வீட்டிலிருந்த எமது தோழரின் தாய் மீது தகாதவார்த்தைப் பிரயோகமும் செய்யப்பட்டுள்ளது.

''இவற்றை நாம் 'ரெலோ' வினரின்கவனத்திற்குகொண்டு வந்தபின் 01-02-86 அன்று பாலையடி வெட்டை என்னுமிடத்தில் எமது இஸ்லாமிய ஆதரவாளரொருவரையும் அவரது நண்பர்கள் இருவரையும் கடத்த முற்பட்ட பாது எமது தோழர்கள் தடுத்து நிறுத்தமுற்பட்ட சம்பவமே மட்டக்களப்பில் நடைபெற்றதாகும். இக்கடத்தலை தடுத்து நிறுத்த முற்பட்ட எமது தோழர்களில் ஒருவரை உங்கள் உறுப்பினர்கள் துரத்திச் சுட்டனர்.

''ஆட்கடத்தல் தடுக்கப்பட்டதை அடுத்து மறுநாள் எமது மூன்றுதோழர்களை திடீரென 'ரெலோ'வினர் கடத்திச்சென்றனர். இவர்களைமீட்க அவ்விடமுள்ள 'ரேலோ'வின் முக்கிய உறுப்பினரிடம் அணுகிய போது, அவர்கள் சம்மதிக்கவில்லை. இதனால் ஆயுதங்கள் சகிதம் உங்கள் முகாமை முற்றுகையிட்டு எமது தோழர்களை மீட்கவேண்டியதாயிற்று. இச் சம்பவத்தில் எமது பாதுகாப்பை ஸ்திரப்படுத்துவதற்காக 'ரெலோ' உறுப்பினர் ஏழுபேர் எமது பாதுகாப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டனர். இவர்கள் 09-02-86 அன்று சம்பவம் நடந்த இடத்தில் ஊர் மக்கள் முன்னிலையில் விடுவிக்கப்பட்டனர்.

''இதுவே மட்டக்களப்பில் நடந்த சம்பவ விபரமாகும். இவற்றை திரித்து நாம் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாயும் அதை 'ரெலோ' விசாரணை செய்ய வந்ததாயும், சைக்கிள்செயினினாலும், கத்தியினாலும் தாக்கியதாயும் எம் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.'' (மா)

# கொலம்பஸின் 'வாரிசு' கொலையுண்டார்!

(மட்ரிட்)

கொலம்பஸ்ஸின் பரம்பரை வழிவந்த ஸ்பானிய துணைக் கடற்படை அட்மிரல் ஒருவர் 'பாஸ்க்' கெரில்லாக்களால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வெராகுவா இளவரசரும் 61வயதானவருமான அட்மிரல் கிறிஸ்தோபல் கொலோன் டீ தர்வாஜாவ் தமது உதவியாளர் மேஜர் றுெட்றிகஸ் நுனெஸ் ஸுடன் பல வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் அமைந்துள்ள எல்விஸோ மாவட்டத்தில் காரில் சென்றுகொண்டிருந்த போது முதலில் காரை நோக்கி ஒரு 'கிரனைட்' குண்டை வீசிய கெரில்லாக்கள் தொடர்ந்து இயந்திரத்துப்பாக்கி வேட்டுக்களைச் சரமாரியாகத் தீர்த்தனராம்.

கார்ச் சாரதியும் கொலையுண்ட அதே வேளையில் அட்மிரலின் உதவியாளர் படுகாயமடைந்தார்.

## மோட்டார் சைக்கிள் கடத்தல்!

[யாழ்ப்பாணம்]

யாழ். மேல் நீதிமன்றமுதலியார் சு. இராமலிங்கத்தின் மோட்டார் சைக்கிள் கோப்பாய் பாலத்தில்வைத்து இனந்தெரியாத இருவரினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

கைதடி கந்தசுவாமி கோயில் பரிபாலன சபைச் செயலாளரான இவர், கோவில் விஷயமாகச் சென்றுவிட்டு சம்பவதினம் இரவு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

மோட்டார் சைக்கிள் கடத்திச் செல்லப்பட்ட பின்னர் இவர் கோப்பாயிலுள்ள தமது வீட்டிற்கு நடந்துசென்றுள்ளதாகக் கூறப்படுகிறது. இதுவரை மோட்டார் சைக்கிள் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை. [க]

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு நகரில் உள்ள நெற்சந்தைப்படுத்தும் திணைக்களக்கட்டிடத்தில் நேற்று ஆயுதப்படையினர் முகாமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 23389, 24126.

# பருத்தித்துறை அசம்பாவிதம் விபரம்சேகரிப்பு சனிக்கிழமை

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறையில் அண்மையில் நிகழ்ந்த அசம்பாவிதங்கள் தொடர்பான விபரங்களைச் சேகரிப்பதற்கான கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு புலோலி பசுவதீஸ்வரர் ஆலய பர்வதவர்த்தனி கலாமண்டபத்தில் நடைபெறும் என பருத்தித்துறை பிரஜைகள் குழுத்தலைவர் பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறையில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பான விபரங்களைத் திரட்ட கடந்த சனிக்கிழமை எடுத்த முயற்சி சோக சம்பவங்களால் தடைப்பட்டு விட்டதால் இந்த விபரச் சேகரிப்பு எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறுமென அவர் தெரிவித்துள்ளார். சம்பந்தப்பட்டவர்கள் (உயிரிழப்பு, படுகாயம், வீட்டுச் சேதம் தொடர்பான) முழுவிபரங்களையும் எழுதிக் கொண்டு வந்து சமர்ப்பிக்கும்படி அவர் கேட்டுள்ளார்.

# வர்த்தகர்களை விடுவிக்க கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் கடத்தப்பட்ட இரு வர்த்தகர்களையும், சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்வதுடன், சுமுகமாகப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளும்படி யாழ். வர்த்தக சங்கச்செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுசம்பந்தமாக சங்கச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

''யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இருக்கும் மோட்டார் உதிரிப்பாகங்கள், விற்பனை செய்பவர்களான சுப்பையா சிவகடாட்சம், செல்லப்பா சிறிஸ்சந்தன் ஆகிய இருவரையும் கடந்த 7ம் திகதி மாலை வானில் வந்தவர்கள் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்றுள்ளனர். அவர்களது உறவினர்களிடம் தொடர்புகொண்டு சுகயீனம் காரணமாக அவஸ்தைப்படும் இருவரையும் உடனடியாக விடுதலை செய்யும்படி யாழ் வர்த்தக சங்கத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.'' [மா]

# மலையக அமைதி பேண விசேஷ குழு

(கொழும்பு)

மலையகத் தோட்டப்பகுதியில் அமைதியைப் பேணவும், பாதிக்கப் பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவுமென விசேடகுழு ஒன்றைத் தாம் நியமிக்கவிருப்பதாக ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தன நேற்று அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

நுவரெலியா அரசாங்க அதிபர் திரு குமார் அபேசிங்காவைத் தலைவராகக் கொண்ட இக் குழுவில் நுவரெலியா - மஸ்கெலியத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகள், இரு பிரதான தொழிற்சங்கங்களான இ தொ. கா ,ஐக்கிய தேசிய தோட்டத் தொழிலாளர்சங்கப்பிரதிநிதிகள், தோட்டத் தொழிற்றுறையைச் சேர்ந்த இரு பிரதான அரசநிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் வகிப்பர்.

இராஜாங்கஅமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இது ஒரு விசாரணைக்குழு அல்ல, கலவரத்தினால் ஏற்பட்ட வடுக்களைப் போக்கும் ஒரு சமாதானக்குழுவே என்று கூறினார். (ஏ)

# இலவச பாடப்புத்தகங்கள் விநியோகம்

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை கல்வி வட்டாரத்திலுள்ள பாடசாலைகளுக்கு இவ் வருடத்திற்கான இலவச பாடப் புத்தகங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை விநியோகம் செய்யப்பட்டது.

மாணவர் தொகைக்கேற்ப இங்கு பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்படவில்லை என்றும், சுமார் 50 வீதமான பாடப் புத்தகங்களே வழங்கப்பட்டன என்றும் இது பற்றி தெரிவிக்கப்படுகிறது.

காலம் கடந்த நிலையில் பாடப் புத்தகம் வழங்கப்பட்ட போதிலும் சகல மாணவர்களுக்கும் கொடுக்கக்கூடிய முறையில் புத்தகங்கள் வழங்கப்படவில்லை என்றும் பாடசாலை அதிபர் ஒருவர் கவலையுடன் நமது நிருபருக்கு தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி கண்மணி

நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி கண்மணி காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்புமனைவியாரும், நடராசா, கந்தசாமி, சுந்தரம்பிள்ளை, இரத்தினசபாபதி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும். சிவக்கொழுந்து, வீரவாகு. மாணிக்கம் ஆகியோரின் சிறிய தாயாரும், நீலாம்பிகை, ஞானசோதி, கமலாதேவி, நிர்மலா, கதிர்காமநாதன், அரியபுத்திரர், நாகம்மா, கந்தையா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 4/1 மணல்தறை ஒழுங்கை கந்தர்மடம் இல்லத்திலிருந்து 14-2-86 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்: சி. கந்தசாமி. (C 744)

## திருமதி பாலசிங்கம் பேளி (கரம்பொன்)

ஊர்காவற்றுறை கரம்பொன் கிழக்கு பாலசிங்கம் பேளி 11-2-86ல் காலமானார். இவர் ஊர்காவற்றுறை (ஜெறுட் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) பாலசிங்கத்தின் அருமை மனைவியும், (சென்ற். பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியரும், யாழ்ப்பாணம் செல்லம்ஸ் உரிமையாளருமாகிய) ஜெறுட்டினது அருமைத் தாயாரும், நாரந்தனை வஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை (ஊர்காவற்றுறை ராஜா ஸ்ரோர்ஸ்), B. L. பங்கராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பெலிசிற்றஸ், இமெல்டா ஆகியோரின் அன்பு மைத்துனியும், மறிற்றோவின் அன்பு மாமியாரும். யூட், நிற்ரு, டெக்ஸ் ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் வியாழக்கிழமை 13-2-86 மாலை 3 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக கரம்பொன் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். [C 736]

## திருமதி மகேஸ்வரி இளையதம்பி

திருமதி மகேஸ்வரி இளையதம்பி 12-2-1986ல் காலமானார். இவர் கொட்டடியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. நடராஜா (ஓவசியர்), காலஞ்சென்ற திருமதி பாக்கியம் நடராஜா அவர்களின் மகளும், சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. சு. இளையதம்பி (இளைப்பாறிய மலேரியாத் தடுப்பு உத்தியோகத்தர்) அவர்களின் அருமை மனைவியும், சிவகுமார், சிவகௌரி, செந்தமிழ்ச்செல்வி, சிவநேசன், சிவதாசன், சிவகங்கா, சிவரூபன், சிவதர்ஷினி ஆகியோரின் அன்புத் தாயாரும், குலேந்திரரூபன், யசோதராதேவி (ஆசிரியை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மாமியாரும், சுஜிதன், விஜெங்னி, கௌசல்யாவின் பேத்தியும், பொறியியலாளர் யோகநாதன், திருமதி தனலக்ஷ்மி பத்மநாதன், திரு. யோகசுந்தரம், திருமதி யோகராணி விஜயரட்னம் அவர்களின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல: 27, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி இல்லத்திலிருந்து இன்று வியாழக்கிழமை (13-2-86) பிற்பகல் 3 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு வில்லூண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். (C 739)

## திரு. செ. நடராசா



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த செ. நடராசா (றேடியோ மெக்கானிக் சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சிவகெங்கையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னம், காலஞ்சென்ற இரத்தினப் பத்தர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சண்முகராசாவின் அன்புக் குருநாதரும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம், மங்கையற்கரசி, அன்னலெட்சுமி, மகாலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இராசமணி, காலஞ்சென்ற அருமைநாயகம், வடிவேலு, ஹரிதாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் வியாழக்கிழமை (13-02-86) பிற்பகல் 4 மணிக்கு இலக்கம் 83. ஹலீபா அப்துல் ஹமீட் வீதி, வண்ணார்பண்ணை இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். [C 741]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org